# நீலாவணன்

## காவியங்கள்



# நீலாவணன்

## காவியங்கள்

கவிஞர் நீலாவணனின்
மூன்று காவியங்கள்

நன்னூல் பதிப்பகம்
கொழும்பு.

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நீலாவணன் காவியங்கள் |
| ஆசிரியர் | : | கவிஞர் நீலாவணன் |
| பதிப்பு | : | செப்டெம்பர் 2010 |
| பதிப்புரிமை | : | எஸ். எழில்வேந்தன் |
| அச்சுப்பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் (தனியார் நிறுவனம்)<br>48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13.<br>தொலைபேசி : 011 2330195 |
| வெளியீடு | : | நன்னூல் பதிப்பகம் |
| விலை | : | ரூபா 300/= (இலங்கை) |
| தொடர்புகளுக்கு | : | s.elilventhan@gmail.com<br>0777 313 720 |

| | | |
|---|---|---|
| Title | : | Neelavanan Kaaviyangal<br>(Neelavanan's Long Poems) |
| Author | : | Poet Neelavanan |
| First Edition | : | September 2010 |
| Copyrights | : | S. Elilventhan |
| Printers | : | Uni Arts (Pvt) Ltd.<br>48B, Bloemendhal Road,<br>Colombo - 13, Sri Lanka.<br>Tel. 011 2330195 |
| Published by | : | Nannool Publishers |
| Price | : | Rs. 300/= (Sri Lanka) |
| Contacts | : | s.elilventhan@gmail.com<br>0777 313 720 |
| **ISBN** | : | **978-955-97461-2-6** |



நீலாவணனை
நிலவுலகுக்கு ஈந்த அவர்
தாயார் தங்கம்மா
தாளடிக்குச் சமர்ப்பணம்
இந்நூல்

# அண்ணன் நீலாவணனுக்கு.....

மரணத்தின் திரையில் மறைந்து நிற்கிறாய். என் மனதுக்குள்ளும் இருக்கிறாய். உனக்கு ஒரு மடல் வரைதல் உவப்பே.

உன் ‘துயில்’ நினைவுக்கு வருகிறது.

“மோனத்தில் உன் உணர்வை மொண்டு
இதய நெடும்வானத்தில்
நீ தீட்டி வைத்திருக்கும்
என்னுடைய தீன உருவை
முழுதும் வடித்தெடுத்து
மீன்விழியில் இட்டு விளக்கேற்றி
தொட்டிலில் நம்
காவியத்தைப் பாடிக் களி”

உனது தொட்டில் காவியத்தை உனது மீன்விழி விளக்கேற்றிப் பாடிக்களித்த பான்மையால்தான் இன்றுன் ஏட்டுக் காவியங்கள் இதோ நூலுருப் பெறுவதைக் காண்கிறாய். “மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்” எனும் வள்ளுவன் வார்த்தைகளில் உன் மகனை வாழ்த்தி இந்த மடலைத் தொடர்கிறேன்.

நம் காவிய மரபுகள் எப்படி இருந்தாலும் அவைகளை அப்படியே தூக்கி வைத்துவிட்டு நவீன வாழ்வின் கதையை யதார்த்தமாகவோ குறியீடாகவோ செய்யுளில் வடித்துக் காட்டிய மூவர்களில் நீயும் ஒருவன். மூத்தவர் மகாகவி அடுத்தது நீயும் முருகையனும். தொடர் நிலைச்

செய்யுளில் நீங்கள் யாத்த நவீன கதைப்பாடல்களுக்கு காவியம் என்ற பெயர் வழங்கப்பட்டது. இவைபோன்ற கதைப் பாடல்களை மேனாட்டார் Long Poems என்றே வழங்குவர். எடுத்துக்காட்டாக மத்தியூ ஆர்னோல்டின் (Matthew Arnold) - Sohrab and Rustum. இந்த நெடும்பாடல்களுடன் காவிய மரபு பெரும்பாலும் கலப்பதில்லை. உன் 'வழி'யும் ஒருவிதமான கதை கூறும் காவியப் பொலிவுடைய நெடும்பாடல்தான். உங்கள் காவியங்களைக் கதைப் பாடல்கள் என்றும் சொல்லலாம். மரபுக் காவியங்களில் உள்ளது போலவே நவீன காவியங்களிலும் கதை பிரதான அம்சம். கதையின் சரடு இல்லாமல் காவியப் பொருள் விரியாது.

கதைச் சிக்கலின்றிக் கதையில்லை. கதைச் சிக்கல் எப்போது தீர்கிறதோ அப்போது கதை முடிந்துவிடும். காவியமும் முடிந்து விடும். மகாபாரதத்தின் கதைச் சிக்கல் தீர ஒரு மகா பாரதப் போர் தேவைப்பட்டது. இராமாயணத்தின் கதைச் சிக்கல் தீர ஒரு ராம ராவண யுத்தம் தேவைப்பட்டது. இந்தப் போருக்கும் யுத்தத்திற்கும் எவை எவை இட்டுச் சென்றனவோ அவைதான் கதைச் சிக்கல் - கதையின் இழுபறிகள்.

உனது காவியங்களில் மூத்தது 'பட்டமரம்'. 1956 வாக்கில் எழுதியிருப்பாய். அடுத்தது 'வடமீன்'. பட்டமரத்திலிருந்து வடமீன் பெற்றுள்ள பாய்ச்சலுக்குக் குறைந்தது ஐந்து வருடம் ஆகியிருக்கும். 'வேளாண்மை' அறுபதுகளின் நடுப்பகுதியில் தொடங்கப்பட்டு அடுத்த பத்து ஆண்டுகளின் பருவங்களில் வளர்ந்திருக்கும்.

'பட்டமரம்' உனது காவியக் கன்னி முயற்சி. எனினும் அதன் கதைச் சரடும் கதைச் சிக்கலும் நன்கு பரிணமித்துள்ளன. எளிமையான கதைச் சரடு. எளிமையான கதைச் சிக்கல். பத்மாவின் காதலைக் கண்டு பயப்படும் பரந்தாமன். பண்ணையார் மகளை அவருடைய ஊழியன் காதலிப்பதா என்ற பழைய பிரச்சனைதான். சிக்கல் பரந்தாமன் பத்மாவின் மரணத்தில் தீர, பட்டமரம் அனைத்துக்கும் சாட்சியம். பட்டமரம் கதை சொல்லியாகவும் கதையின் ஒரு பாத்திரமாகவும் பகுத்தறிவுவாதியாகவும் அன்பில் உயர் ஆளுமையாகவும் இருப்பது காவியத்துக்கு ஒரு வலுவான பரிமாணத்தைக் கொடுக்கிறது.

எளிமையான இந்தக் காவியம், பாடசாலை மாணவன் பாடம் ஒப்புவிப்பதுபோல மிக வேகமாகச் செல்கிறது. வெண்பாவின் ஊடகத்தில்

ஒரு காவியத்தை நடத்துவது புகழேந்திக்கே உரிய புகழ். அதில் தனித்து இருபத்தைந்து வயதுடைய இளைஞனான நீயும் பங்கு கொள்கிறாய். உதாரணத்துக்கு ஒரு சில வெண்பாவை ஓதிப் பார்க்கிறேன் - உன் புணர்ச்சிகள் நீக்கி!

கண்ணொடு கண்ணிரண்டும் கட்டிப் புரண்டபின்னர்
எண்ணப் புயலில் இருபேரும் - கண்ணுறக்கம்
இன்றித் தவித்தார் இனமறியாத் துன்பத்துள்
ஒன்றித் துடித்தார் உளம்

கண்ணுறக்கம், உளம் என்பவற்றில் உள்ள நெருடலைக் கடந்தும் உருவகத்தால் உயர்கிறது வெண்பா.

பாதகன் பண்ணையாரின் ஆத்திரத்தை நீ கூறும் விதமோ அலாதி.

"காதலர்கள் கூடிக் களித்திருந்த காட்சிதனைப்
பாதகனாம் பண்ணையார் பார்த்தவுடன் - பூதலமே
அந்தரத்தில் ஆடும்; அனல் கக்கும் கண்ணிரண்டும்
சிந்தையிலே பொங்கும் சினம்."

அதேபோல ஒரு சோகத்துடன் பட்டமரம் கதையைச் சொல்லி முடிப்பதும் ஒரு சோபிதம்.

"பட்டமரம் என்கதையைப் பாட்டாகக் கேட்டீர்கள்
மட்டிலாது உள்ளம் மகிழ்வுற்றேன் - தட்டுகிறான்
காற்று என்னைக் கண்டு கலங்காதீர் போகிறேன்
போற்றாதீர் காதலை - பொய்!"

************

உன் 'வடமீன்' இற்கு வருகிறேன்.

கதையின் சரடு, விடலைகளின் விட்டில் பூச்சித் தனமில்லாமல், ஒரு கீழ் மத்தியதரக் குடும்பத்தின் கொழும்பு வாழ்வின் கோணங்களைக் கொண்டுள்ளது. கதையின் சிக்கல் கணவன், மனைவி மீது கொள்ளும்

சந்தேகத்தில் எழுகிறது. சிக்கல் தீர்கையில் தெளிவு பிறக்கிறது. காவியத்தின் பொருள் புதிய மாற்றத்தையும் விரிவையும் பெறுகிறது.

வேறு வகையாகச் சொன்னால் கதைச் சிக்கலின் எதிரும் புதிருமான இயக்கத்திலேயே காவியம் தன் அர்த்தத்தைக் கண்டுபிடிக்கிறது. கதைச் சிக்கலை ஏற்படுத்துவது நீ காட்டும் கொழும்பு வாழ்க்கைச் சூழல் மட்டுமல்ல. நீ கற்பிதமாகக் கயிறுகொடுத்து, வாசகன் மனதில் சந்தேகத்தை வளர்க்கும் பாலியல் வேட்கைப் படிமங்களும், இரட்டை அர்த்த வாக்கியங்களும் சேர்ந்து கதைச் சிக்கலுக்குக் காரணமாகின்றன. இதனால் அருந்ததியில் அவளுடைய கணவனான மூர்த்தி சந்தேகம் கொள்ளுமுன்பே வாசகன் அவள்மீது சந்தேகம் கொண்டு விடுகிறான், ஆனந்தன் மீதும்தான்.

"குப்புறப் படுத்துக்கொண்டே
குறிவைக்கும் எலியைப் பூனை"

"அண்ணாந்து பார்த்தான் வெள்ளை
ஆடையில்லாத பல்லி
பெண் ஒன்றை மருவல் கண்டு
பேசாமல் கதவடைத்தான்"

இந்த இரண்டு படிமங்களும் வாசகனுடைய மனதில் ஒரு பாலியல் முகிலைப் பரப்பத் தொடங்குகின்றன.

"அடுக்களை யிருந்த பூனை
ஆனந்தன் அறைக்குள் ஓட
அடுப்பிலே நெருப்புப் பொங்கி அணைந்தது...."

"திருந்திழை மார்பின் சேலை
திருத்தினாள் திறவா வாயில்
பொருந்தினாள் நகையே உள்ளம்
பூரித்தாள், புசித்தான், போனான்"

"பருப்பினைப் பிசைந்தான் ஆனந்
பசுநெய்யே வடிதல் கண்டான்
இறைச்சிக் கூட்டுள் அகப்பை
இட்டு இட்டு ஈரல் தேடி

உருப்படியாக உண்டான்
ஒண்ணாத மட்டில் விட்டு
அருப்பிடம் அகன்றான் அந்த
அம்புயம் ஆனந்தித்தாள்''

இந்த இரட்டை அர்த்தங்கள் வாசகனிடம் சந்தேகத்தை வளர்க்க கதைச் சிக்கல் களை கட்டுகிறது. வாசகனிடம் சந்தேகத்தை வளர்த்த பின்னரே அதனை உறுதி செய்யும் வகையில் கணவனான மூர்த்திக்குக் கயிற்றைக் கொடுக்கிறாய்!

நீ வாசகனிடம் சிருஷ்டித்த சந்தேகத்தை எப்படித் தீர்க்கிறாய்? மூர்த்தி தன் செவியேறலில் அல்லது தன் சிந்தனையில் கொண்ட சந்தேகம் உறுதியாயிற்றா?அல்லது ஒழிந்து போனதா? இதை நீ தீர்க்கும் விதமே தனி. வேறொன்றும் இல்லை. அருந்ததியை உண்மைக்கு உண்மையாய் பேச விடுகிறாய். அது மிகவும் உயர்ந்த உத்தி. நீயாக ஏதும் உரையாமல் அருந்ததியை நிந்தித்த மூர்த்தியே தன்னைத்தானே பணியச் செய்து முடிச்சை அவிழ்க்கிறாய்.

"வானந்தான் இடிந்து வந்தென்
வாழ்விலே விழுந்ததின்று!
ஆனந்தா இந்த வீட்டில்
அடிவைக்க வேண்டாம் போய்வா..."

"போகலாம் வெளியே என்று
பொருமினாள்!..."

"........................ செருமிக் கொண்டு
சாகலாம் நாயே என்று (தன்னையே)
சலித்தவாறு உள்ளே வந்த வேகத்தில்.....
......................... வீழ்ந்தான்"

இவ்வாறு அண்ணே நீ, நீயே வாசகர் மனத்தில் தூவிய சந்தேக முகில் விலக்கப்படாவிட்டால், இந்தக் காவியம் வம்புக் காவியம் ஆகிவிடும் அற்பத்தனமும் அசூசையும் சுயநலமும் தொழுநோய் ஆகும் ஒரு சோர்வுவாதத்திற்கே இட்டுச் சென்றுவிடும்.

சும்மா சொல்லக்கூடாது. இந்தக் காவியத்தின் கடைசிப் பாடல் மாட்சிமையுடன் ஒரு வெளிச்சத்தை மனதில் பாய்ச்சுகிறது. அந்தப் பெண் பாத்திரத்துக்கு அருந்ததி என்று பெயர் வைக்கும்போதே இந்த அற்புதத்தைத் தொடங்கியிருக்கிறாய். நான் பிரமித்துப் போகிறேன்.

அருந்ததி என்ற பெயரில் சப்தரிஷி மண்டலத்தில் ஒரு நட்சத்திரம் உண்டு என்பதை நான் அறிவேன். அது அரிதாகவே தெரிவதால் கற்புடைய பெண்ணுக்கு அதனை ஒப்பீடு செய்யும் ஐதீகத்தையும் அறிவேன். கலியாணங்களின்போது அம்மி மிதித்து அருந்ததி காட்டும் சடங்கு பற்றியும் அறிவேன். கலியாணப் பெண் அருந்ததிபோல் கற்புள்ள பெண்ணாய் வாழவேண்டும் என்ற குறிப்பு அந்தச் சடங்கில் உள்ளதையும் அறிவேன். இவ்வாறு பௌராணிகத்தில் கற்பின் தேவதையாக அருந்ததி நட்சத்திரம் காட்சி தருவதும் அறிவேன்.

எனினும் அருந்ததி நட்சத்திரத்துக்கு "வடமீன்" என்றும் ஒரு பெயர் உண்டு என்பதை உன் காவியத்திலிருந்துதான் அறிந்தேன். அருந்ததி என்ற பெயருடைய அந்தப் பெண்ணிலிருந்து அருந்ததி நட்சத்திரத்தைப் பிரித்துக் காட்ட "வடமீன்" என்ற பெயரைப் பாவித்த உன் நுட்பம் எனக்கொரு நூதனம்! அதுமட்டுமல்ல காவியத்தின் கடைசிப் பாடலில் அருந்ததி நட்சத்திரத்தை "வடமீன் நங்கை" என்று உருவேற்றி இருப்பது உன்னால் தமிழுக்குக் கிடைத்த ஓர் அன்பளிப்பு. அதுமட்டுமல்ல. "பூலோகம் எங்கும் கற்பைப் புதுப்பிக்கும் வடமீன் நங்கை" என்ற அடி அருந்ததி நட்சத்திரத்துக்கு தமிழில் கிடைத்த மிக அழகிய கவித்துவப் புகழ் மொழியும் ஆகிறது.

இந்தப் பீடிகைகளோடு உன் "வடமீன்" காவியத்தின் கதைச்சிக்கலை உன் கடைசி வரியிலே அவிழ்க்கும் உன் புனைவு நுட்பத்தை மட்டுமன்றி கதையின் சிக்கல் தீரும்போது கதையும் முடிகிறது என்பதைக் காட்ட வருகிறேன். கற்பின் திறமும் தெய்வீகமும் உடைய வடமீன் நங்கை "ஆலாலம் உண்ட கண்டன் அணைப்பிலே கிடந்தாள்", அந்நியனின் படுக்கையில் அல்ல என ஈடில்லா முறையில் நீ இணைத்த அந்த வரிகளில் மூர்த்தியின் தெளிவு வாசகனின் தெளிவுபோல முற்றுப் பெறுகிறது.

வாசகனுக்கு இந்தத் தெளிவு தோன்றும்போது அந்த அருந்ததி என்ற பாத்திரம் புதிய அர்த்தம் கொள்கிறாள். அனாதை, ஒரு

மாப்பிள்ளையை யாசித்துக் கொக்குப்போல வாடிக்கொண்டு நின்றவள், கணவனுடன் கொழும்பின் பட்டின வாழ்வையும் கொஞ்சம் பழகிக் கொண்டவள், பல்லினை இழுத்து மூடும் பவ்வியம் பெற்றுக்கொண்டவள், கதையின் முடிவில் பெண்ணியத்தின் அனுதாபம் பெறும் பெரும் பெண்ணாகிறாள். அந்தவகையில் நீ பெண்ணியத்தார் கவனம் கொள்ளவேண்டிய ஒரு பெரும் படைப்பாளியுமாகிறாய். உன் கடைசிப்பாடலை அதன் கவர்ச்சிக்காக மீண்டும் ஒருமுறை மேய்கிறேன்.

"நீலவான் மீதில் நின்ற நிலவெங்கோ மறைய விண்மீன்
கோலத்தின் நடுவே ஊன்றிக் குறிப்பாகப் பார்த்தான் மூர்த்தி
பூலோகமெங்கும் கற்பைப் புதுப்பிக்கும் வடமீன் நங்கை
ஆலாலமுண்ட கண்டன் அணைப்பிலே கிடந்தாள். வாழ்க"

******************

'வேளாண்மை' நினைவில் என்னையறியாமலே ஒரு வேட்கை எழுகிறது. அதில் நீ ஊட்டியது பாதி, 'குடலை' யின் பூக்கள் மீட்டியது மீதி. குடலை, கதிர் என்னும் இரு பாகங்களைக் கொண்டுள்ளது இப்போது கிடைக்கும் உன் வேளாண்மை. வேளாண்மை என்ற பெயரை உன் கடைசிக் காவியத்திற்கு எப்படியோ முன்கூட்டியே நிச்சயித்துக் கொண்டாய். அதில் பெருமையும் கொண்டாய். உன் புதிய இல்லத்துக்கும் அந்தப் பெயரைத் தந்தாய்.

வெள்ளாமை, பயிர்ச்செய்கை என்பதைவிட வேறு பொருள் ஒன்றையும் வேளாண்மைக்குக் கொண்டிருந்தாய். முயற்சி என்று நீ சொல்லிக்கொண்டதாக நினைவின் மூட்டம். எனினும் வேளாண்மை என்பதற்கு வேறு பொருளும் உண்டு. ஈகையையும் அது குறிக்கும். ஈகை, உபகாரம், கொடை என்று பிரியும்.

எனினும் வேளாண்மை என்பதற்கு நீ வெள்ளாமை என்ற பொருளும் கொண்டாய் என்பதை உன் வேளாண்மை காவியத்தின் படலங்களுக்கு நீ வைத்த பெயர்கள் பகர்கின்றன. குடலை - பூப் பருவம். கதிர் - காய்ப் பருவம். வெள்ளாமையின் பருவங்களைக் கொண்டு நீ உன் படலங்களுக்கு வளர்ச்சி முறையில் பெயரிட்டுள்ளதால் இன்னும் சில

பருவங்களை எண்ணத்தில் கொண்டிருப்பாய், இன்னும் இரண்டொரு படலங்களாவது உன் வரைபடத்தில் இருந்திருக்கும் என்பது சர்வ நிச்சயம்.

எனவே இது முற்றுப்பெறாத ஒரு பயிர் என்பது எனது முடிவு. பத்து ஆண்டுக் காலத்தின் ஊடாகவும் இந்தப் பயிர் முற்றுப் பெறாதது ஏன் என்ற கேள்வியும் எழுகிறது. 1965 இல் நாம் சந்தித்தபோது இந்தக் காவியம் அரைவாசிக்கு வளர்ந்திருந்ததாகச் சொன்னாய். நீ மரணித்தது 1975 இல்.

முற்றுப்பெறாத காவியத்தின் முழுமையான கதைச் சரட்டை எவ்வாறு தொடரப் போகிறோம்? அதேபோல முற்றுப் பெறாத காவியத்தின் கதைச் சிக்கல் எங்கு எப்படி என்னென்ன உருட்டல் களுக்கும் புரட்டல்களுக்கும் மத்தியில் தீரும் என்று நாம் சாத்திரம் பார்ப்பது எப்படி? மரணத்தின் திரைக்குப் பின்னால் மறைந்திருக்கும் உன்னால் எதையும் வாய் திறந்து பேசமுடியாது. எனினும் என் மனதுக்குள் பேசுவையோ? யோசிக்கிறேன்.

கதையின் சிக்கலில் நான் மிகவும் கண்ணாய் இருப்பேன். எதிரும் புதிருமான கதைச் சிக்கலினூடு வரும் காவியப் பொருள்தான் உயிர்த்துவம் உடையது. உனது வடமீனில் அதனை வான் உயரக் கண்டோம். பட்டமரத்தின் வேகா வேகத்திலும் அது மின்னல் போல் தெறித்தது. வேளாண்மையில் கதைச் சிக்கல் முற்றுப் பெற்றதிற்கும் முற்றுப் பெறாததற்குமிடையில் எவ்வாறு முயங்குகிறது?

குடலையில் எடுத்த எடுப்பிலேயே கதைச் சிக்கல் குமுறுகிறது.

"அண்ணனின் இளைய பெட்டை அன்னம்மா சமைந்ததாக
வண்ணார வயிரன் பெண்டில் வழியிலே சொன்னாள் என்று
பொன்னம்மா சொல்ல, கந்தப் போடியார் விசள மேதும்
கொண்ணன் வீட்டார்களிங்கு கொண்டுவந் தாரோ என்றார்."

"வியளங்கள் இல்லையென்றாள். வேறென்ன செய்வார் நம்மை
பயறிலே கல்லாய்ப் போனோம் பதறினார் கந்தப் போடி"

இந்தக் கதைச் சிக்கலின் எதிரும் புதிருமான இயக்கத்தில் கதை கருக்கட்டுகிறது- களவெட்டியில்.

"வலிய வந்து எனக்கு மாறாய் வழக்காடித் தோற்ற கோபம்
அழகிப் போடிக்கும் பெண்டில் அவளுக்கும்....."

"............................................ செல்லனுக்கு
கலியாணம் பாண்டியூரில் கணபதிப் போடி வீட்டில்!.....
செய்யாது போனால் என்னைச் செருப்பெடுத்து அடிடா சாமி"

இப்படித் தொடங்கும் கதைச் சிக்கலின் எதிரும் புதிருமான இயக்கம் காவியத்தின் கடைசிவரை தொடர, அதன் முறுக்கில் காவியப் பொருள் வெளிப்பட, கடைசியாய் கிடைக்கும் தீர்வில் கதை முடிந்து காவியம் நிறைவுபெறவேண்டும். ஆனால் என்ன நடந்தது? கதைச்சிக்கல் இடையில் கரைந்து போகின்றது, அன்னத்தின் மஞ்சள் நீராட்டுவிழாப் பந்தலுக்குள்! எப்படி? எப்படியென்றால் வஞ்சமெல்லாம் தீர்ந்து கந்தப் போடியார் அங்கு வருகை தந்துள்ளார்.

"செம்பு வந்து பந்தலுக்குள் சேரும் முன்னே பலமாகச்
செருமிக்கொண்டு
வம்பு வந்ததென்றெழுந்து வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தார்
கந்தப்போடி
நம்பு மச்சான் மஞ்சளில்லை சோறுண்ண எழுமென்றார்
அழகிப்போடி"

பகைமை போய்விடுகிறது. மனப் போராட்டம், மானப் போராட்டம் எல்லாம் மழுங்கிப்போய்விடுகிறது. பிறகு எங்கே கதை? இது அண்ணே எப்படி இருக்கிறதென்றால் துரியோதனன் சூதாடி அபகரித்ததை யெல்லாம் பாண்டவரிடம் திருப்பிக் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டிருந்தால் எப்படியிருக்குமோ அப்படி

கதை ஏன் இப்படி கோட்டை போனது? அது உன்னுடைய திசை மாற்றம். நீ தெரிந்தெடுத்த வழி எனலாம். எப்படியெனினும் கதைப்பொருள்

கதையினூடு அல்லாமல் கவிதையாக வெளிவரத் தொடங்கிய திணை மயக்கம் என்றுதான் எனக்குப்படுகிறது.

காவியத்தின் 'கதிர்' என்ற இரண்டாம் பாகம் முழுவதும் கதைச் சரட்டைக் கட்டறுத்து கதாபாத்திரங்கள் துள்ளிக் குதிக்கும் கவிதைச் சொரியலாகவே எனக்குத் தோன்றுவதாகச் சொல்லலாம். மஞ்சள் நீராட்டு, வசந்தத்தின் வருகை, புத்தாண்டுப் புளகம், தேரும் தெருவும், உறவின் சுகம், வருப் பிறப்பு, வேட்டை, தேரும் திமிரும், கூத்துக் களரி ஆகிய கருப்பொருள்கள் அலசப்படுபவற்றில், வசந்தத்தின் வருகைக்குரியவை விபரிப்பாகவும் (descriptive) ஏனையவை கதையாடல்களாகவும் (narrative) உள்ளன. இவற்றினூடாக உனது மண்ணின் சடங்குகள், சம்பிரதாயங்கள், நடப்புகள், நாகரீகங்கள், மனப்பாங்குகள், வரன்முறைகள், பழக்கவழக்கங்கள், அனுஷ்டானங்கள் பற்றியெல்லாம் உரத்து ஓசை நயத்துடன், கவிதை நயத்துடன் உற்சாகத்துடன் உணர்ச்சி பூர்வமாய் உரைக்கின்றாய்.

இவற்றினுடன் 'குடலை' யின் கதையினூடாக விரியும் கமத்தின் கருமம் கிரிகைகளையும் சேர்த்துப் பார்த்தால் அந்த மண்ணின் பெரும்பரப்பான பண்பாட்டுக் கோலத்தைக் கொணர்ந்திருக்கிறாய் என்பதில் சந்தேகமில்லை. எனினும் முக்கியமான திருமணச் சடங்குகள், சாவீட்டுச் சடங்குகள், மகப்பேற்று மான்மியம், மருங்கை அன்ன பிற குழந்தையின் கொண்டாட்டங்கள் என்பன விடப்பட்டுள்ளன என்பதைக் கருதும்போதுதான் உன் காவியம் முற்றுப் பெறாத விசனம் என்னுள் மூள்கிறது.

எப்படியெனினும் நீ இந்தக் காவியத்தில் உன் காலத்தின் குரலாய் ஒலிப்பதைக் காண்கிறேன். உன் காலமும் சரி எவர் காலமும் சரி என்றும் ஒன்றாய் இருந்ததில்லை. இந்த ஈழ மணித்திரு நாட்டை விட்டு அந்நியர் போகவேண்டிய வரலாற்றுச் சூழல் மலர்ந்தபோது நம்முள் ஒருவகையான தேசியம் நறுமணம் வீசத் தொடங்கியது. அந்த ஒருவகையான தேசியம் விரைவில் தெளிவாகி அல்லது பிரிவாகி நம் மண்ணில் பண்பாட்டுத் தேசியமாகிப் பரிணமித்தது. விபுலானந்தன் நமது வித்தகனானான். வாழையடி வாழைகள்பற்றிப் பேசப்பட்டன. மகரயாழ் நமது சின்னமானது. 'பாடும்மீன்' உனது படிமமும் பின் உன் பத்திரிகையுமாயிற்று.

பண்பாட்டுத் தேசியத்தின் வேரில் தமிழ்த் தேசியம் தழைத்தாலும் பண்பாட்டுத் தேசியம் இன்னும் பட்டமரமாகவில்லை. பூவும் பிஞ்சுமாய் இன்னும் பொலிகிறது. அதன் ஒரு கிளையும், இலையும், கொத்தும், வித்துமானதே உன் வேளாண்மைக் காவியம்.

இப்போது நீ என்னை அரட்டுகிறாய். என் உள்ளுக்குள் இருந்து உரைக்கின்றாய். கதையாகச் சொன்னால் என்ன, கவிதையாகச் சொன்னால் என்ன என்கிறாயா? கதையில் கவிதையும், கவிதையில் கதையும் கலந்தது என்கிறாயா? கடைசியில் கூத்துக் களரிக்கருகில் கந்தப்போடியாரும் அழகிப் போடியாரும் செல்லன், அன்னத்தின் கலியாணப் பேச்சுவார்த்தை நடத்துவதால் கதை முடிவுற்றதென வ. அ. இராசரெத்தினம் கூறுவதைக் காட்டுகிறாயா? உன்முறை அதுவல்லவே அண்ணே?

உன் மண்ணின் சடங்கு சம்பிரதாயத்தைச் சதையும் ரத்தமுமாகக் காட்ட வந்த நீ கல்யாண விழாவைக் கோலாகலமாகக் காட்டாமல் இருப்பாயோ? மாப்பிள்ளை, பெண் பார்க்கப் போவதை எவ்வளவு மௌசுபடுத்துவாய். மற்றும் சம்பிரதாயங்களை எப்படியெல்லாம் மகோன்னதப்படுத்துவாய்.

இன்னும் இருக்கிறதண்ணே எவ்வளவோ உன் இனிய காவியம். எப்போது இனி நீ பிறந்து எழுதப்போகிறாய் அதனை.

நிற்கிறேன் உன் நினைவில் என்றும்

*அன்புடன்*
**சண்முகம் சிவலிங்கம்**
*'பிரகாஷ்த்தம்'*
*பாண்டிருப்பு,*
*கல்முனை*
*செப்டெம்பர் 2010*

# பதிப்புரை

இலக்கிய ஆர்வலர்களுக்கு வணக்கம்.

என் தந்தையார் கவிஞர் நீலாவணன் எழுதிய மூன்று காவியங்களோடு உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.

எனது தந்தை நீலாவணன் எழுதிய வேளாண்மை என்ற காவியம் முற்றுப்பெறாத படைப்பாக இருந்தது. ஆனால் அதைப் படித்துப் பார்த்த அவரின் எழுத்தாள நண்பரான வ.அ.இராசரெத்தினம், அதை முடிவுற்ற ஒரு காவியமாகவே கருதித் தனியொரு நூலாகத் தனது சொந்த அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டார். மிகக் குறைந்த பிரதிகளே அச்சிடப்பட்ட அந்நூலை அவர் தன் வசதிக்கேற்ப வெளியிட்டு, நீலாவணனை ஒரு காவியப் படைப்பாளியாகவும் இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தினார். தமிழ்நூல்களுக்குச் சாகித்திய மண்டலப் பரிசுகள் வழங்கப்படுவதுகூட நிறுத்தப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில் 1982ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வேளாண்மை காவியம் இலக்கியச் சுவைஞர்கள் பலரையும் சென்று சேரவில்லையென்பது கவலைக்குரியதே.

அண்மையில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் நிகழ்வொன்றிற்குச் சென்றிருந்தபோது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் கல்விபயிலும் ஓ.கோகுலரூபன் என்ற சகோதரன், தான் காவியங்கள் தொடர்பாக ஆய்வு செய்வதாகவும் நீலாவணனின் வேளாண்மை தவிர மற்றுமொரு காவியமுமுள்ளதாக அறிவதாகவும் அதன் பிரதியொன்றைத் தந்துதவுமாறும் கேட்டார். 50 களின் நடுப்பகுதியில் என் தந்தையார் எழுதி ஈழகேசரி இதழில் இருவாரங்கள் தொடர்ச்சியாக வெளிவந்த "பட்டமரம்" என் நினைவுக்கு வந்தது. அதன் பிரதியைத் தேடப் புகுந்தபோது என் தந்தையாரால் எழுதப்பட்டு எந்த இதழ்களிலும் பிரசுரமாகாதிருந்த "வடமீன்" என்ற மற்றுமொரு காவியத்தையும் கையெழுத்துப் பிரதியாகக் கண்டெடுத்தேன்.

அப்போதே என் மனதில் இந்த மூன்று காவியங்களையும் ஒரே தொகுப்பாக வெளியிடவேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. இந்தச் சம்பவம் நடந்து அடுத்தடுத்த வாரங்களில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் வேளாண்மை காவியம் தொடர்பாக நான் உரையாற்றிய பின்னர் கருத்துச் சொல்லவந்த சகோதரன் கோகுலரூபன் என் எண்ணத்திற்குத்

தூபமிடுவதுபோன்று இந்த மூன்று காவியங்களையும் நூலாக வெளியிடவேண்டுமென்ற யோசனையை முன்வைத்தார்.

இவ்வளவும் நடந்து நான்கு மாதங்களேயாகின்றன. இதோ உங்கள் கரங்களில் நீலாவணன் காவியங்கள்!

என் தந்தையாரோடு நெருங்கிப் பழகிய ஏ.ஜே.கனகரத்னா, எம்.ஏ நு.ஃமான் மாமா, மருதூர்க் கொத்தன் மாமா, மு.சடாட்சரன் மாமா ஆகியோர் இதற்கு முன்னர் நாம் வெளியிட்ட எம் தந்தையாரின் நூல்களுக்கு முன்னுரை எழுதியிருந்தார்கள். என் தந்தையாரோடு கூடியிருந்த இந்த இலக்கியக் குழாத்தில் இணைந்திருந்த மற்றுமோர் ஆளுமை சண்முகம் சிவலிங்கம், (எனக்கு ஸ்டீ.ஃபன் மாமா) இந்த நூலுக்கு சிறப்பானதொரு முன்னுரை எழுதித் தந்திருக்கிறார். என் தந்தையாரோடு இணைந்து பாடும்மீன் என்ற சஞ்சிகையை வெளியிடுவதில் ஸ்டீ.ஃபன் மாமா வழங்கிய பங்களிப்பையும், கடும் உழைப்பையும் சிறுவனாக இருந்த வேளைகளில் நான் கண்டிருக்கிறேன். என் தந்தையின் விருப்பத்திற்குரியவராகவிருந்த ஸ்டீ.ஃபன் மாமா எனக்குச் சிலபோதுகளில் ஆசானாகவும், சிலபோதுகளில் நண்பராகவும், சிலபோதுகளில் ஆலோசகராகவும் இருந்திருக்கிறார் என்பதிலும் எனக்குப் பெருமையே. வேலைப் பழுக்களின் மத்தியிலும் நாம் எதிர்பார்த்ததை விட விரைவாக முன்னுரையை எழுதித்தந்த அவருக்கு என் நன்றிகள்.

இம்முறை எனது தந்தையாரின் நூலுக்கு அட்டைப்படம் வரைந்து தந்துள்ள கலைஞர் ஷாந்த ஹேரத் சிங்கள இலக்கியத் துறை நன்கறிந்த ஒரு படைப்பாளி. 200 க்கும் மேற்பட்ட சிங்கள மற்றும் ஆங்கில நூல்களுக்கு அட்டைகளை வடிவமைத்துக் கொடுத்துள்ள ஒரு புகழ்பெற்ற சித்திரக் கலைஞர் அவர். எனது அலுவலகத்தில் என்னுடன் பணியாற்றும் சிங்கள நண்பர்களிடம், அட்டைப்படம் வடிவமைப்பதற்கு ஒரு கலைஞரை அறிமுகப்படுத்துமாறு கேட்டபோது ஷாந்த ஹேரத் அவர்களின் பெயரைச் சொன்னார்கள். அவரிடம் தொடர்புகொண்டு உரையாடியபோது அவரின் மென்மையும் எளிமையும் என்னைக் கவர்ந்தன. தந்தையாரின் கவிதைகளைப் பார்த்து 'இவற்றை ஏன் சிங்களவரான நாமும் படிக்குமாறு மொழிபெயர்க்கக்கூடாது?" என்று கேட்டார். அட்டை வடிவமைப்பிற்காகும் செலவென்ன என்று கேட்டபோது 'உங்கள் தந்தையார் ஒரு எழுத்தாளர். அவரைக் கௌரவம் செய்யவேண்டியது எங்கள் கடமை" என்று சொன்னாரே தவிர இன்றுவரை அதற்கான கொடுப்பனவு எவ்வளவென்று

சொல்லவேயில்லை. நேர்த்தியாக அட்டையை வடிவமைத்துத் தந்த ஷாந்த ஹோரத் அவர்களுக்கும் என் நன்றி.

எம் தந்தையாரின் இளைய சகோதரனான கலாநிதி பாலசண்முகம் அவர்கள் (என் சித்தப்பா) இந்த நூலை அச்சிடுவதற்கான நிதியில் ஒரு பகுதியைத் தந்துதவியுள்ளார். தன் சகோதரரின் எழுத்துக்கள் அனைத்தும் நூலுருவாக வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறைகொண்டவர் அவர். நீலாவணன் கவிதை நாடகங்கள் நூல் வெளியீட்டின்போது கலந்துகொண்டு முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டவர். அமெரிக்காவில் நியூஜேர்ஸியில் வசிக்கும் அவர் அங்குள்ள தமிழ்ச் சங்கங்களின் உதவியோடு நீலாவணனின் எழுத்துகளை அங்கு வாழும் தமிழர்கள் மத்தியிலும் அறிமுகப்படுத்தி வருகிறார். நன்றியை எதிர்பார்க்காத அவருக்கும் இந்த வேளையில் எமது நன்றிகள்.

நீலாவணனின் மூன்று காவியங்களில் முற்றுப்பெறாத வேளாண்மையின் கதைக்களம், விவசாய இயந்திரங்களைப்பற்றி எள்ளளவும் தெரிந்திராத தென்கிழக்கின் விவசாயக் கிராமமொன்று. கதை நிகழ்ந்த காலம் 40களுக்கும் 50களுக்கும் இடைப்பட்ட காலமெனக் கொள்ளலாம். ஒரு விவசாயக் குடும்பத்தை மையமாகக் கொண்ட இந்தக் கதையோட்டத்தின் மூலம் கிழக்கின் சடங்குகள், சம்பிரதாயங்கள், நடப்புகள், நாகரீகங்கள், மனப்பாங்குகள், வரன்முறைகள், பழக்கவழக்கங்கள், அனுஷ்டானங்கள் என்பவற்றை ஆவணப்படுத்தவே நீலாவணன் முயன்றுள்ளார். அவரின் மரணம் அதற்கு இடமளிக்கவில்லை.

இக்காவியத்தின் பிந்திய கதை நீலாவணனால் எழுதப்பட்டிருப்பின், செல்லன் - அன்னம் திருமணச் சடங்கும் அதனுடன் தொடர்புபட்ட சடங்குகளும், பெரியநீலாவணைக் கிராமத்தின் பேச்சியம்மன் மற்றும் விஷ்ணு கோவில்கள், பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோவில் திருவிழாக்கள், பிள்ளைப்பேறும் அதனுடன் தொடர்புடைய சடங்கு சம்பிரதாயங்கள், அன்னத்தைத் திருமணம் செய்ய முனைந்து தோற்ற உடையாரின் மகன் கணபதிப்பிள்ளையின் குழப்படிகள், அவன் மருந்து மந்திரம் செய்தல், அதனால் செல்லன் அன்னத்தைப் பிரிந்து வேறொரு பெண் மையலில் வீழல், பின் அவன் திரும்பி வருதல், பார்வதிப் பெத்தாவின் சுகவீனம், ஆயுர்வேத மருத்துவ முறைகள், பெத்தாவின் மரணம் அதனுடன் தொடர்பான சடங்கு சம்பிரதாயங்கள், பொங்கல்,

கதிர்காமத்துக்குக் கால் நடைப் பயணம் எனப் பலப் பல செய்திகளைக் கொண்டுவந்திருக்கும்.

நீலாவணனால் எழுதமுடியாமல்போன அவற்றை எழுதும் முயற்சியில் கவிஞர் செங்கதிரோன் எனும் த. கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஈடுபட்டுள்ளதையும் இவ்வேளையில் குறிப்பிடுவதும் பொருத்தமே.

வழமைபோலவே இம்முறையும் இந்த நூலை அழகுற அச்சிட்டுத் தந்திருக்கும் யுனி ஆட்ஸ் நிறுவனத்தின் அதிபர் பொன் விமலேந்திரனுக்கும் அவர் தம் பணியாளர்களுக்கும் குறிப்பாக சகோதரி சுதா மற்றும் சகோதரன் கோபி ஆகியோருக்கும் என் நன்றி.

இதுவரை என் தந்தையாரின் இரு கவிதைத் தொகுப்புகளையும், ஒரு சிறுகதைத் தொகுப்பையும், ஒரு கவிதை நாடகத் தொகுப்பையும் தந்தபோது நீங்களளித்த பேராதரவைப் போன்றே இந்தக் காவியத் தொகுப்புக்கும் உங்களது ஆதரவு கிடைக்குமென நம்புகிறேன்.

***நன்றி.***

**எஸ். எழில்வேந்தன்**
*கொழும்பு*
*2010 செப்டெம்பர் 26*
*s.elilventhan@gmail.com*
*0777 313720*



# பட்டமரம்

# பட்டமரம்

உலகிலே நல்லார் ஒரு சிலரே தோன்றி
நிலவினார் அன்புவழி நின்று- கொலைவல்ல
காலன் அவர்க்கின்று கல்லறைகள் கட்டிவிட்டான்
ஞாலமே துன்ப நதி

பட்டமர மானாலும் பண்பில் உயர்ந்தோன்யான்
எட்டிமர மென்னோ டிணைந்திருந்தாள் - கெட்டாலும்
நல்லார்கள் பட்டியலில் நானும் ஒருத்தனென்றே
சொல்லுவேன் கண்ணீர் சொரிந்து

உத்தமரை யீங்கு உயிரோடு போற்றாமற்
செத்த பிறகே சிலைநாட்டும் - பித்தரெனைப்
போற்றாது விட்டாலும் போகட்டு மிக்கதையைச்
சாற்றியே தீர்வன் சகத்து!

என்ன தியாகம் இயற்றினாய் என்றிடையிற்
'கன்னாபின் னா' வென்று கத்தாதீர் - இன்னும்
இரண்டொருநாள் மட்டும் இருப்பே னதற்குட்
திரண்டழுவீர் என்பெருமை தேர்ந்து!

ஏழை பரந்தாமன் என்றாலுங் கட்டழகுக்
காளை; முருகர் கணக்காயன் - நாளைக்குக்
கஞ்சில்லை யேயென்ற காரணத்தி னாலந்தப்
பஞ்சைக்குச் சற்றே படிப்பு!

ஏட்டிற் கணக்கை எழுதுவான் ஓய்விருந்தாற்
பாட்டுப் புனைவான் பரந்தாமன் - நாட்டின்
மலையைக் கடலை மதியைம் மலரைக்
கலையைப் புகழுங் கவி

என்னிழலில் வந்தே இருப்பான் எனைப்பார்த்து
"என்னே பெருமுள்ளம்" என்றுரைப்பான் - மண்மீது
எட்டி அரசுக்கு எவ்வளவோ மட்டமதைக்
கட்டி அணைத்த கதை!

"தாழ்வுயர்வு பாராட்டித் தன்போல் மனிதரது
வாழ்வைக் கெடுக்கின்ற வஞ்சகர்சூழ் - நீள்புவிக்கு
பாடம் புகட்டிப் பகுத்தறிவு போதிக்கும்
மாடமன்றோ விந்த மரம்"

என்று பலவாக வென்னைப் புகழ்ந்துரைப்பான்
என்றுமிலா இன்பநிலை யெய்திடுவேன் - அன்றும்
வழக்கம்போ லென்னிழலில் வந்தான் பரந்தாமன்
பழக்குலையா லீந்தேன் பசிக்கு!

அழகொன்றை நாடி அலையும் அவன்றன்
அழகிலே கொள்ளானாம் ஆசை - கிழமல்லன்
காற்றிலே பட்டுக் கலைந்த முடியோடே
தோற்றுவான் என்றுந் தொடர்ந்து

அங்கம் சிவப்புநிறம் அந்திக் கதிரொளியில்
பொங்கும் அழகைப் புகலுங்கால் - இங்கு தமிழ்
வல்ல கவிகள் வரைகின்ற கற்பனையில்
இல்லாத இன்ப எழில்

பண்ணையார் பெற்றெடுத்த பைங்கொடியாள் பத்மாவின்
கண்ணுக் குணவாய்க் கணக்காயன் - சன்னலிலே
அன்னா ளழகை யனுபவித்துக் கொண்டிருந்தான்
என்னென் றுரைப்பே னிதை!

வைத்தவிரு வேல்விழியை வாங்கமன மற்றுநெஞ்சிற்
தைத்தா ளவனதனைத் தாங்காது - பித்தானான்!
பச்சைக் கிளியாகப் பத்மா பறந்து விட்டாள்
இச்சைகொண்டா னன்னா ளிடம்.

பட்டும் பகைக்குமுடல் பல்லோ பரல்வரிசை
வட்ட மதிநாணும் வண்ணமுகம் - தொட்டாற்
துவளுங் கொடியாம் துடியிடைமேல் நெஞ்சிற்
தவழா திரண்டு தனம்!

கண்ணோடு கண்ணிரண்டும் கட்டிப் புரண்டபின்னர்
எண்ணப் புயலி லிருபேரும் - கண்ணுறக்க(ம்)
இன்றித் தவித்தாரினமறியாத் துன்பத்துள்
ஒன்றித் துடித்தா ருளம்!

"பத்மா விளம்ரோஜா பற்ற நினைத்தாயேல்
குத்தும் பணமென்ற கூர்முட்கள் - இத்தோடு
இங்கிருந்து போய்விடுநீ இல்லையெனி லுன்வாழ்வைப்
பங்கப் படுத்தும் பணம்!"

பாட்டை எழுதிப்பின் பஞ்சாய்க் கசக்கியதை
தோட்டத்தில் விட்டெறிந்தான் தூரத்தே - வாட்டம்
விடுத்தான் விரைந்தான் வினைமுடிக்கப் பேனா
வெடுத்தான் தொடங்கிற் றெழுத்து!

ஆளரவ மில்லா வறையின் கதவோரம்
யாழரவம்! செய்வதங்கே யாரென்றான் - வாளிரண்டைப்
பாயவிட்டுக் காதலியாள் பத்மா கதவோரம்
ஞாயமில்லை யென்றாள் நடு!

"அப்பா வழைத்தாரா ஆகட்டு" மென்றெழவே
தப்பென்று கூறித் தடுத்தாளை - ஒப்புக்கு
உட்கார லாமென் றுரைத்தா னுளம்நடுங்கக்
கட்பார்வை யெல்லாங் கணக்கு!

"பரந்தாம னுங்களது பாட்டைப் படித்தா(ல்)
இரங்காதாருள்ள மிரங்கும் - பறந்தோடிச்
சென்று தவம் நீங்கள் செயவேண்டா மிங்கேயே
என்று மிருப்போ மிணைந்து"

பத்மா வுரைத்தாள் பரந்தாமன் கேட்டதனைப்
"பத்மா விதென்ன பரிகாசம் - பித்திலையே!
ஏழைக் கணக்கனுக்கு ஈவா ரெவருன்னை
நாளை யெனக்கு நமன்!"

"ஏழை பணக்கார னில்லையன்பா! காதலுக்கு
கோழைபோன் றென்னவெல்லாங் கூறாதீர் - ஏழைதான்
எட்டி! மரமதனை ஏற்றே அரசொன்று
ஓட்டி வளர்ந்திருப்ப தோர்!

பகுத்தறிவே யற்ற பசிய மரங்கள்
வகுத்த சமத்துவத்தை வாழ்வில் - பகுத்தறிவு
கொண்டோ மெனக்கூறிக் கூச்சலிடும் நம்மவர்கள்
கண்டாற் திருந்திடுவார் காண்!"

கோதை யுரைத்திட்ட கொஞ்சு மொழியென்றன்
காதிலே வீழக் களிகொண்டேன் - ஓதிடுவீர்
நல்லவர்கள் பட்டியலில் நானொருவ னென்றுரைத்தே(ன்)
இல்லையோ வுண்மை யிதில்?

பரந்தாம னேதோ பதில்கூற வாயைத்
திறந்தான் தடுத்தாளத் தேனீ - மறந்தா(ர்)
உலகத்தை யன்னேர முள்ளத்தோ டுள்ளம்
கலந்தா ரிதுவே கதை!

அன்று வழக்கம்போ லன்னா ரிருபேரும்
என்னடியிற் கூடி யிருந்தார்கள் - தன்கரத்தைப்
பத்மாவின் தோளிற் பதித்தான் பரந்தாமன்
உத்தமிக்கோ நெஞ்சி லுவப்பு!

என்ன வதிசயமோ வென்றைக்கு மில்லாமல்
அன்னேரம் பண்ணைக் கதிகாரி - மின்விரைவாய்
உல்லாசக் கோலை யுயர்த்தியே தோட்டத்துள்
நல்வரவு செய்தார் நடந்து!

காதலர்கள் கூடிக் களித்திருந்த காட்சிதனைப்
பாதகனாம் பண்ணையார் பார்த்தவுடன் - பூதலமே
அந்தரத்தி லாடு மனல்கக்குங் கண்ணிரண்டும்
சிந்தையிலே பொங்குஞ் சினம்!

“என்னுப்பைத் தின்றே யெடுத்த வுடலாலே
என்மானங் கொன்றா யிழிபுலையா - என்மகளைத்
தொட்டே யுறவாடித் தொன்மை நிலைமறந்த
முட்டாள் உயிரே முடி”

கையிலிருந்த கருங்காலிக் கைத்தடியை
மெய்யின் பலஞ்சேர்த்து மேலோங்கி - ஐயோ!
அடித்தார் பரந்தாமன் அம்மாவென் றேங்கித்
துடித்தான் விழுந்தான் துவண்டு!

"அப்பா அவரை அடிக்காதே! என்மீதே
தப்பென்று" கூறிக் தடுத்தாளை - அப்பாவென்(று)
என்னை யழைத்தா லெடியே விபச்சாரி
உன்னை யொழிப்பே னுடன்"

பல்லைக் கடித்துடனே பத்மாவைக் கைப்பிடித்து
எல்லாம் தெரியும் எனக்கென்றே - நில்லா
திழுத்துக் கொண் டேயில்லம் ஏகினா ராங்கே
கழுத்தை நெரிக்கவிலைக் காண்!

செங்குருதிச் சேற்றில் சிறிதான சீவனுடன்
தங்கப் பரந்தாமன் றான்கிடந்தான் -எங்கிருந்தோ
கூவிற் றொருகோழி! கோவென் றழுததுநாய்
ஆவி யகன்ற தவன்!

நள்ளிரவில் என்னண்டை நண்ணினார் மூவரவர்
கள்ளரல்ல பண்ணையவர் கையாட்கள் - பள்ளம்
பறித்தாரப் போதெனது பக்கத்து வேரை
முறித்தாரென் வாழ்வும் முடிந்து

பரந்தாமன் பொன்னுடலைப் பள்ளத்தே யிட்டுக்
கரந்தா ரிருளிற் கடிது - மரந்தான்!
இலையசைத்தே னென்றன்னிறுதி வணக்கம்
கலைஞனுக்குச் செய்த கடன்!

பத்மா கிணற்றினிலே பாய்ந்திறந்தா ளென்றொருவன்
கத்தினான் பண்ணையார் காதுக்குள் - பித்தனைப் போற்
கத்திக் களைத்தார் காதலவேணா டொன்றியவள்
செத்தா ளிதுவோ சிறப்பு!

"பண்ணையார் பெண்ணைப் பரந்தாமன் காதலித்தான்
கன்னி களவாகக் கர்ப்பமுற்றாள் - பெண்ணவளை
அற்பனவன் கைவிட் டகன்றானதனாலே
தற்கொலைசெய் தாளந்தத் தாய்!"

பத்திரிகைச் செய்தி பணத்தின் பெருமையினால்
உத்தமனைக் குற்றமுரைத்தார்கள் - இத்தனைக்கும்
பட்டமரம் மென்கீழ்ப் பரந்தாமன்! கண்டறிந்தால்
திட்டுமே வையம் தினம்

பட்டமர மென்கதையைப் பாட்டாகக் கேட்டீர்கள்
மட்டிலா துள்ள மகிழ்வுற்றேன் - தட்டுகிறான்
காற்றென்னைக் கண்டு கலங்காதீர் போகிறேன்
போற்றாதீர் காதலைப் பொய்!

**(ஈழகேசரி டிசம்பர் 1957)**

❀ ❀ ❀ ❀



# வடமீன்!

# வடமீன்!

மேளங்கள் முழங்க, தாலி
மேன்மையாய்க் கட்டி, தங்கள்
சூழலில் வாழும் சுற்றம்
சூழ்தர நடந்த தந்த
ஏழ்பிறப் பினிலும் கூடும்
இனிய கல்யாணம், நாற்பத்
தேழாண்டின் இளைஞன் மூர்த்தி,
இளித்தவாய் இலிகி தருக்கு

அரசியல் அலுவலாள், ஓர்
ஆண்பனை அனைய செம்மல்!
புருஷனாய் கேட்டுப், பார்த்த
பொடிச்சிகள், 'வேண்டாம்' என்றால்
அருகிலே கொக்காய் நின்ற
அம்மாச்சி மகள் அ னாதை,
அருந்ததி தள்ளு வாளோ
அத்தானைத்? துணிந்தே செய்தாள்!

தூலாந்தென நிமிர்ந்த பல்லின்
தோகையர், துரைமா ரோடும்
கலந்து வாழ் கின்றார் என்றால்
கள்விற்கும் கடைக்குத் தட்டி
எழுந்ததே யன்ன, பல்லின்
இனியாளாம் அருந்ததிக் கிவ்
விளந்தாரி மூர்த்தி நல்ல
இணங்கிய சோடி யன்றோ!

கொட்ட ஹேற னாவின் சந்தில்
குகைபோன்ற மாளிகைக் கண்,
மட்டற்ற மகிழ்ச்சி யோடும்,
மறுமாதம், மனைவியைப் போய்ப்
பெட்டிகள் படுக்கையின்றி,
விமானத்தில் அழைத்து வந்து
பட்டின வாழ்வும் கொஞ்சம்
பயிற்றினான்; பழகிக் கொண்டாள்!

'பட்டிக்காட்டாளே, ஃது
பாராளு மன்றம் என்னுங்
கட்டிடம் கோட்டைப் பார்த்துக்
கடவையில் நடவும்; நில்! இம்
எட்டிவை காலை; 'காலான்'
இடறுதோ? கடவுளே....சீ!
கட்டதை இறுக்கி; 'கோல்பேஸ்'
கடற்கரை இதுதான் கண்ணே!

பார்த்தாயா சனத்தை! உந்தப்
பல்லினை இழுத்துமூடு!
வார்த்தையாடுதற்காய், நண்பர்
வருகிறார்; முன்பெல்லாம்.... நான்
பார்த்தாலும் பார்க்காமற் போம்
பயலெலாம் வருகின்றார்! உன்
வேர்த்திடும் முகத்தை நீவி,
விடுகமுந் தானை தொங்க!

தெகிவளை மிருகக் காட்சி,
தேசத்தின் முதுசொம், 'மியூசியம்'
தகுதிக்கும் மேலாய் உள்ள
தரத்திலே பொழுது போக்கு
பகிரங்கமாக நண்பர்,
பழகிடும் வண்ண மாக,
மிகவுஞ் சந்தோஷ மாக,
அருந்ததி மூர்த்தி வாழ்ந்தார்!

கந்தோரில் கணக்கில், ஏதோ
கவலையீ னத்தால் நேர்ந்த
தொந்தர வினுக்காய் மாதத்
தொகையிலே தொண்ணூற் றெட்டை
தந்தபின் மிகுதியோடும்,
தன்மனை புகுந்த மூர்த்தி
ஐந்தாறு மாதத் துக்குள்,
ஆள்காலி! என்று சொன்னான்.

வீட்டுவா டகைக்குமட்டும்
வேண்டுமே, எழுபத்தைந்து!
சீட்டுக்கா சிருபத் தைந்து
சில்லறைக் கடைக்கு, பால், மீன்
கூட்டுக்கா ரிக்கு வண்ணான்
கூலிக்கு, கொடுக்க, மேலும்
ஈட்டுக்குக் காப்பை வைத்து
எடுத்தாலும் போதா தென்றான்!

கோப்பியை ஆற்றிக் கொண்டே,
கோபிக்க வேண்டாம் அத்தான்,
காப்பினை ஈடுவைத்தால்
கடற்கரை, சினிமா என்று
கூப்பிடல் கூடா தென்னை!
கொண்டுபோய் வையும், என்றாள்
ஆப்பிட வில்லை மூர்த்தி!
அதற்கென்ன நிறுத்தும் என்றான்.

அம்மாவின் சீதனத்தை
அள்ளிவந் தவளைப் போல!
சும்மா தா; முகத்தை யென்ன
சுளிக்கிறாய்; சோக்கைப்பார்! என்
அம்மாவும் இந்த நேரம்
அருகிலே இருப்பா ளாமேல்...
செம்மையாய்க் கொடுப்பேன் பேச்சு!
சிவசிவா! செய்து வைத்தாள்!

மண்டையி லடித்துக் கொண்டே
மாற்றினான் உடுப்பை மூர்த்தி
அண்டைய அறையில் வாழும்
ஆனந்தன் இவற்றை யெல்லாம்
கண்டானோ, கண்ட அந்தக்
கணத்திலே நடந்து வந்து
நின்றான் முன் கதவில்; மூர்த்தி
நிமிர்ந் தென்ன வேண்டும்? என்றான்.

‘காசெதுந் தேவையானால்
கைம் மாற்றுத் தரலாம்; ஒன்றும்
யோசிக்க வேண்டாம் மேலும்...
யோசிக்க எதுவுமில்லை!
பேசிய தெல்லாம் கேட்டேன்
பிழையெண்ண மாட்டீர்! உங்கள்
நேசத்தின் நிமித்தமாக
நினைத்ததை உரைக்க வந்தேன்!

ஆனந்தன் இளைஞன்; நல்ல
அழகான பையன். அன்பில்
தேனான குணத்தன்! என்னைத்
தெரிந்தவன். அதனாற் சொன்னான்
ஏன் தம்பி நிற்கிறீர் வந்
திரு மிரும்; இந்த மாதம்
தானிந்தக் கரைச்சல்! என்று
தன்பாட்டில் இளித்தான் மூர்த்தி,

தம்பிக்குச் சிரம மில்லை
யானால், நூற் றெழுபத்தைந்து
நம்பிக்கைக் கடனாய்த் தந்தால்
நல்லது; நாச மாவார்,
சம்பளப் பணத்தில், மொத்தம்
சரிபாதித் தொகையை வெட்டி
இம்மாதம், என்னைப் போட்டு
இழுத்தடிக் கின்றார் என்றான்.

தருகிற போது தாரும்.
தவணையாய்த் தந் தாலும் போம்!
வருகிறேன் என்று போய்ப், பின்
வந்திரு நூறு ரூபா
தருகையில், 'உபகாரம்' சீ
தாங்களா விடுங்கள்! என்றான்.
அருந்ததி! யென்ற வாறே
அறையுளே புகுந்தான் மூர்த்தி

என்னவோ தலையிற் பாரம்
இறக்கினாற் போல, மூர்த்தி
கண்களை மூடி மண்டூர்க்
கந்தனை வணங்கி, இல்லாள்
முன்னங்கை பற்றி, சின்ன
முகத்தினைக் கரத்துள் ஏந்தி
என்னன்பே! என்றான், கொஞ்சி
இனியென்ன கவலையென்றான்.

கடைக்கணக் கடைத்த பின்னர்
கையிற் பொட்டணமும், சாய்ந்த
நடையோடும் - சீட்டியோடும்,
நாயகன் மூர்த்தி வந்து
கிடையிலே விழுந்தான்; இல்லாள்
கிட்டப்போய் முகர்ந்து விட்டு
அடிசக்கை இதுதான் காசு
அழிகிற வழியோ? என்றாள்.

பறங்கிக் குட்டிகளுக்குப் பின் நீர்
பழகியும் திரிந்த தெல்லாம்....
அருந்ததி அறிவேன் அத்தான்!
ஆயினும் பொறுத்துக் கொண்டேன்!
மருந்துக்குந் தொடாத நீங்கள்
மதுபானம் பண்ணலாமோ?
விருந்துக்கும் போனீரோ? யார்
வீட்டிலே? சொல்க! என்றாள்.

விரும்பி நீ கேட்ட சேலை,
விலை நாற்பத் தைந்து ரூபா
அருந்ததி உனக்கில்லாமல்
ஆருக்கு! அழகைப் பார் பார்!
விருந்துவை! என்றான் மூர்த்தி.
வெடுக்கெனப் பறித்துப் 'பார்சல்'
திறந்தனள்; சேலைகண்டாள்
எடுத்ததை விரித்துப் பார்த்தாள்.

பார் கண்ணே, என்று கன்னப்
பழங்களை வருடி, முத்தம்
ஆறேழு கொடுத்தான் மூர்த்தி
'அழகினைப் பாரேன்! ஐயே.....
ஆரிந்த ஏழையான
அருந்ததிப் பெண்ணைக் கட்டிப்
போராடச் சொன்னார்? போங்கள்!
பொய்க் கோபம் புகன்றாள் பின்னர்

சேலையைப் பிடித்த செய்தி
சிரிப்பொன்றால் விளக்கி, உங்கள்
பாலையா மனைவி கூடப்
பார்த்தாசை வைத்த சேலை!
நூலையும் பிடித்துப் பார்த்து,
மார்பிலும் சரித்துப் போட்டு,
வேளையாய் விட்ட துண்ண
வேண்டாமோ! எழுக என்றாள்.

இடியப்பம் தானா? என்றான்
'இல்லை; ஊர் அரிசிச் சோறு'
அடியந்தத் தம்பி எங்கே?
ஆனந்தன் நல்ல பிள்ளை!
பிடிவாத மாயும்வந்து
பிறத்தியார்க்குதவு கின்றான்
பொடியனும் ஹோட்டல் சோறு
போய்விட்டான் போலும்! போடும்

நாளைக்கு, இறைச்சி காய்ச்சும்
ஞாயிற்றுக் கிழமை தானே
வேளைக்குச் சொல்லிச் சின்ன
விருந்தொன்று வைப்போம். என்றான்
நாளைக்குத் தானே, நாக
நந்தினி சினிமா! உங்கள்
மூளைக்குள் ஒன்று மில்லை
முனகினாள் துணைவி, 'ஓம் ஓம்!

என்னவோம்! பிறகு கையில்
இருக்குமா காசு? செய்வோம்!
பின்னொரு முறைபோய் பார்ப்போம்
படத்தினை என்றாள்; ஆகா
பெண்ணென்றால்.... பெண் நீ! என்றான்
பெருமையே எனக்கும், இஃதைத்
தின்னென்று சோற்றை யள்ளித்
திணித்தனன் மனைவி வாயில்,

அடுத்த நாள் விசேடமாக
ஆக்கிய விருந்தை, மூர்த்தி
அடுத்தறை நண்பன் அந்த
ஆனந்த னோடும் பேசி
அடிக்கடி சிரித்த வாறே
அருந்தினான்; அருந்த திக்குக்
கடுத்தன கால்கள்; நல்ல
கறியென்னக் களித்த துள்ளம்!

அம்மா போய் வருட மாறு
அதற்குப் பின் இன்றைக்குத்தான்,
உம்மாணை உண்மை எங்கள்
ஊர்ச்சாப்பா டுண்டேன்! என்றன்
அம்மாவும் இப்படித்தான்,
அருமையாய்ச் சமைப்பாள்! என்ற
நண்பனைப் பார்த்து, மூர்த்தி
நயனத்தால் நன்றி சொன்னான்.

உண்டபின் கதவின் ஓரம்
திண்ணையில் உட்கார்ந் தார்கள்
துண்ணென்று தும்மி மூக்கைத்
துடைத்தனன் மூர்த்தி; செம்பில்
தண்ணீரைக் கொண்டு, வாசற்
படி, தலை, தெளித்தாள் தையல்
என்னவாம் புதினம் என்று
எடுத்தனன் மூர்த்தி பேப்பர்.

பாயிலே அமர்ந்து தானே
பரிமாறி உண்டாள் பாவை
போய்வரு கின்றேன் என்று
ஆனந்தன் போன பின்னர்,
தாயினை நினைந்து கொண்டான்
தனியனாள்; ஹோட்டல் சோறோ,
வாயிலும் வைக்க வொண்ணா!
வம்புக்கா சென்றான் மூர்த்தி

தம்மொடு பேசிக் கொண்டே
தாம்பூலம் தரித்து, நல்ல
சம்பளம் 'இரயிலில் காட்' ஆள்
சரியான 'அதிகவேலை'
நம்பக்கத்தூரான்; பாவம்
நாமென்ன செய்யலாம்? சீச்!
சம்பளம் எடுத்த அன்றே
சரவைகள் என்றான் மூர்த்தி!

என்செய்ய லாகும்? நாமும்
ஏழைகள், உங்கள் பேச்சில்
ஒன்றுமே யில்லை! ஓர் நாள்
ஊருக்குக் கொடுக்க லாம்! ஓர்
நண்பர்க்குத் தினமும் சோறு
நாம் போடல் எந்த வாறு?
என்றனள் மனைவி, நீ யேன்
இரைகிறாய்? என்றான் மூர்த்தி

இரவெலாம் இதையே பற்றி
இருவரும் வாதித்தார்கள்
கரவிலா மனத்தன் மூர்த்தி,
கருணையே வென்ற தீற்றில்
சரியென்றாள் சந்தோ ஷித்தார்!
சயனித்தார்; எழுந்தார், காலை
வரச் சொன்னார் ஆனந்தர்க்கும்
வகை செய்தார் சாப்பாட்டிற்கு

மாதமொன் றுதிரும்; ஓர் நாள்
மாலையில், வந்த ஆனந்
ஈதுசாப் பாட்டுக் காசு,
எனமூர்த்தி கையில் தந்தான்
பாதகம் இல்லை, நாம் தாம்
பணந்தர உளதே; மேலும்
ஏதுக்குக் கொண்டு வந்தீர்?
இருக்கட்டும்; என்றான் மூர்த்தி

கைம்மாற்றுக் கடனைப் பற்றிக்
கவலையுங் களுக்கேன் அண்ணே!
இம் எடும் என்றான் ஆனந்,
இரு தம்பி, என்ற மூர்த்தி
இம்மள வெதற்கு? 'இங்கே'
இல்லாளை அழைத்தான் இன்று
சம்பளம் போலும்? என்றான்
சங்கடப் பட்டான் பாவம்!

அப்படி யானால் கூட
ஐம்பதே போதும்; உம்மை
இப்படிச் செலவு வாங்க
என்னதான் சமைத்துப் போட்டோம்!
ஒப்புக்கே சாப்பிட்டீர் நீர்;
ஒருசதம் அதிகம் வேண்டாம்!
தப்பினான் மூர்த்தி; மீதி
தந்தான்தன் தலைவி கையில்.

அப்பாடா என்று மெல்ல
அடுக்களை புகுந்தாள்; ஆங்கே
குப்புறப் படுத்துக் கொண்டே
குறிவைக்கும் எலியைப், பூனை
அப்புறம் போகும் வண்ணம்
அதட்டினாள்; அதட்டல் கண்ட
செப்புப்பாத் திரங்களெல்லாம்
சிரித்தன; சிணுங்கி நின்றாள்!

அடுக்களை யிருந்த பூனை,
ஆனந்தன் அறைக்குள் ஓட,
அடுப்பிலே நெருப்புப் பொங்கி
அணைந்தது; சமைய லாக,
படுத்திருக் கின்ற ஆனந்
பக்கமாய்ச் சென்று, தண்ணீர்
பிடித்துளேன், குளித்துச் சாப்பா
டானபின் தூங்கு மென்றாள்

உண்ணப் போம் முன்னர், எங்கள்
ஆனந்தன், அறைக்குள் தொங்கும்
கண்ணாடிப் படத்துக்குள் ஓர்
கட புட சத்தம் கேட்க,
அண்ணார்ந்து பார்த்தான், வெள்ளை
ஆடையில் லாத பல்லி,
பெண்ணொன்றை மருவல் கண்டு
பேசாமற் கதவடைத்தான்

அருந்ததி, என்றான் ஆகா
அற்புதம் கறிகள் இன்று!
விருந்துதான் படைத்தாய்! உன்கை
வேகுமா நெருப்பில்! என்றான்
திருந்திழை மார்பின் சேலை
திருத்தினாள்; திறவா வாயில்
பொருந்தினாள் நகையே! உள்ளம்
பூரித்தான் புசித்தான்! போனான்!

பருப்பினை பிசைந்தான் ஆனந்
பசு நெய்யே வடிதல் கண்டான்
இறைச்சிக்கூட்டுள் அகப்பை
இட்டிட்டு ஈரல் தேடி
உருப்படியாக உண்டான்!
ஒண்ணாத மட்டில் விட்டு
அருப்பிடம் அகன்றான் அந்த
அம்புயம் ஆனந்தித்தாள்

❦ ❦ ❦

மூர்த்தி கந் தோரால் வந்தான்;
முகம் கறிச் சட்டி யானான்
ஆத்திரம் கொப்பளிக்க
ஆனந்தன் இந்த வாரம்
ராத்திரி வேலை யாமோ?
பகலெலாம் இருந்தான் போலும்!
நேர்த்திதான் என்று பல்லை
நெறுநெறு சத்தம் செய்தான்.

உன்னோடும் தனிமை யாக
உரையாடல் உண்டு போலும்?
என்னடி விழிக்கிறாய்? தூ!
எத்தனை நாட்களாக?
என்னிலே பிழைதான்! பேயன்!
இனியவன் இந்த வீட்டில்
உண்ணவும் கால்வைத் தானேல்
ஒரேவெட்டு! கவனம்! என்றான்

தேவடி யாளே உன்னைத்
தீர்க்கிறேன் என்றான். நின்றோர்
காவடி யாட்டம் போட்டான்!
கண்களை உருட்டிக் கொண்டான்
போவடி யுள்ளே யென்றான்!
புலம்பினான்; போட்டான் நாலு!
'கேவலம்' என்றாள். கேட்டுக்
கீழ்சாதி நாயே! என்றான்

அத்தான் ஏன் என்னை வீணாய்
அடிக்கிறீர்? என்றாள். வாயைப்
பொத்தடி! என்று மூர்த்தி
புறப்பட்டான் கோல்பே சிற்கு
பத்தரை மணிக்கு வந்தான்
பலமான குரலில், இல்லாள்
சத்தத்தை அறிந்து காதைச்
சரியாகப் பிடித்துக் கேட்டான்.


வானந்தான் இடிந்து வந்தென்
வாழ்விலே விழுந்த தின்று!
ஆனந்தா! இந்த வீட்டில்
அடிவைக்க வேண்டாம்; போய்வா!
ஏனென்ன நடந்த? தென்றான்!
எனக்கொன்றுந் தெரியா தென்றாள்!
மோனத்தில் நிமிடமொன்று
முடிந்தது! முறைத்துப் பார்த்தான்!

போகலாம் வெளியே என்று
பொருமினாள்! செருமிக் கொண்டு,
சாகலாம் நாயே! என்று
சலித்த வா றுள்ளே வந்த
வேகத்தில், மூர்த்தி காலை
விறாந்தையில் இடறி, வீழ்ந்தான்!
போகிறான் ஆனந் ஹோட்டல்
புதுக் கணக் காரம்பிக்க!

நீலவான் மீதில் நின்ற, நிலவெங்கோ மறைய, விண்மீன்
கோலத்தின் நடுவே, யூன்றிக் குறிப்பாகப் பார்த்தான் மூர்த்தி
பூலோக மெங்கும் கற்பைப் புதுப்பிக்கும் வடமீன் நங்கை,
ஆலால முண்ட கண்டன் அணைப்பிலே கிடந்தாள். வாழ்க

(யாவும் கற்பனை)

❀ ❀ ❀ ❀



# வேளாண்மை

# குடலை

## உணவுண்டார் கந்தப்போடி

ஆரங்கே? பொன்னம்மா உன்
அடுப்படி அலுவல் ஆச்சா?
நேரமும் கடந்து போச்சே!
நீ என்ன செய்கின்றாய் போய்ச்
சோறெடு, சிவசிவா.... ஏய்
சுரைக் காயை என்ன செய்தாய்?
நீறினை நெற்றி யிட்டு
நெஞ்சினை வயலில் விட்டுச்
சோறொடும் மீனைப்பிட்டுச்
சுவைக்கின்றார் கந்தப்போடி

சோக்கான கறிகா! தோலிச்
சுண்டலில்லை ; முன் னால் நான்
கேட்காமல் அள்ளி வைப்பாய்,
கிழவனாய்ப் போனேன் பாரு!
காக்கையேன் பகல் முழுக்கக்
கறுபுறுக்கிறதோ? சேதி
கேட்கவோ, வீட்டுக் காரும்
கிளை வழி வருகின் றாரோ?.......

அள்ளிவைத்தாலும் சண்டை
அளவுக்கு வைத்தால் கேலி
துள்ளுவீர் குமரன் போல!
தோளுக்கு மூத்த பிள்ளை
செல்லையா பசியில் மாய் வான்
செல்லங் கொஞ்சுதற்கா நேரம்?
சொல்லுங்கள் ; குழம்பா? வெள்ளைச்
சொதியிலா? தயிரும் உண்டு.

கோடிக்குள் இதரை வாழைக்
குலையிலே பழங்கள் ஆய்ந்து
சாடியில் தேனைக் குஞ்சுச்
சட்டியுள் வார்த்து, பாலும்
ஓடியே கொண்டு வைத்து
உட்கார்ந்து, நமது கந்தப்
போடியார் மனைவியான
பொன்னம்மா புழங்கு கின்றாள்

## பொன்னம்மா வியளம் சொன்னாள்

அண்ணனின் இளைய பெட்டை
அன்னம்மா சமைந்த தாக
வண்ணார வயிரன் பெண்டில்
வழியிலே சொன்னாள்; என்று
பொன்னம்மா சொல்ல, கந்தப்
போடியார் விசள மேதும்
கொண்ணன் வீட் டார்களிங்கு
கொண்டுவந் தாரோ? என்றார்.

வயல்வழக் காடித்தோற்ற
வயிரம் போல் அவர்க்கு நம்மேல்!
அயலெல்லாம் சொல்லிப் போனார்
ஆயினும் இங்கே யொன்றும்
வியளங்கள் இல்லை, என்றாள்
வேறென்ன செய்வார் நம்மை?
பயறிலே கல்லாய்ப் பேனோம்!
பதறினார் கந்தப்போடி.

கையினை வட்டிக் குள்ளே
கழுவி, ஓர் செம்பு நீரைப்
பெய்து வாய் தீட்டி, ஈர்க்கில்
பிய்த்த வா றேப்பம் விட்டு
செய்கிறேன் அவர்களுக்குச்
சீக்கிரம் வேலை! என் சொல்
பொய்யில்லை! என்று கந்தப்
போடியார் புளுங்கிச் சொன்னார்.

மண்டபத்துள்ளே வந்தார்,
மாடத்திலிருந்த வட்டா
கொண்டுமுன் வைத்து, ஓலைக்
குட்டானில் வயலுக்குள்ளே
கொண்டுசெல் வதற்காய், பாக்கு
வெற்றிலை சுண்ணாம் போடு
'உண்டென' வைத்து மூடி
அவர்கையில் தந்தாள் பொன்னு.

நமக்கென்ன நட்டம்?.... இல்லை
நாமங்கு போவதாலே
சுமக்கின்ற பெருமை யென்ன?
சுண்ணாம்பை விரலில் தொட்டு
கம கமக் கின்ற கைப்பும்
கலந்து கை கசக்கித் தந்து,
சமன் செய்து போடியாரைச்
சாந்தமாக் கினாள்பொன் னம்மா.

கறுப்பன் சீனட்டி நெல், நம்
கையினால் வடித்த எண்ணெய்
கருப்பட்டி, உழுந்து, முட்டை
கடையிலே மஞ்சள் மட்டும்!
'பொருப்பத்தி' வாங்கி வைத்தேன்
பொடிச்சிக்குக் கொண்டு போக
விருப்பில்லை அவர்களுக்கு;
விட்டுத்தள் ளுங்கள் என்றாள்.

அன்னம்மா அழகிதான்; இங்
கார்வந்து முடிப்பான் பார்ப்போம்!
பொன்னம்மா, மறுகால்............ கொண்ணன்,
பொடியனைக் கேட்டுக் கீட்டு
என் வீட்டுப் படியில் வந்து
ஏறட்டும்? எழிய நாய்கள்!
சன்னதம் எழுந்தாற் போலக்
கறுவினார் கந்தப் போடி.

## வண்டி புறப்பட்டது

கொண்டையென் றிருந்த, குஞ்சுக்
குடுமியை உதறிக் கட்ட
வண்டியும் வாசலுக்கு வந்தது.
வண்டிக் காரச்
சண்டியன் சாமித்தம்பி,
'சரி இனிப் புறப்பட் டாற்றான்
கண்ணுக்குள் இருட்டும் வீழக்
களத்துக்குப் போவோம்' என்றான்.

கடுக்கனில் பிடித்த சால்வைக்
கரையினைக் கவன மாக
எடுத்துப்பின், சோற்றுப்பெட்டி
ஏனங்கள் ஏற்றச் சொல்லி
எடுத்தடி வைத்தார் கந்தப்
போடியார்; எதிர்பாராமல்
கடப்படி மாவில் நின்ற
காக்கையோ, சனியன் சிச்சீ!

போச்சுது சால்வை என்று
போடியார் உதற, 'என்ன
ஆச்சுது? வெள்ளைப் பீதான்
அது நல்ல சகுனம்? என்ற
கூய்ச்சலைக் கேட்டுத் தண்ணீர்ச்
செம்பொடும் பொன்னு வந்தாள்
சாச்சச்சா பொழுதும் நல்லாய்ச்
சாய்ந்ததே! என்றான் சாமி.

தொந்தியை முன்னே தள்ளி,
தொடர்ந்து தம் முடம்பை வைத்துக்
கந்தப்போ டியாரும் வண்டிக்
கடைசியில் ஏறிக் கொண்டு
குந்தினார் வைக்கோல் மெத்தை
குனிந்தது; காத்து நின்ற
சந்தனக் காளைச் சோடி
சதங்கையைக் கிலுக்கும் ஆட்டி.

ஏறினான் சாமி; கேட்டி
எடுத்தவை முதுகில் நாலு
சாறினான். மூக்கணத்தைச்
சரி செய்து, நடங்கோ; சொல்லை
மீறினால் முதுகுத் தோலை
மிச்சமாய் வையேன் என்றான்
பாறுகால் எருதிரண்டும்
பாய்ந்தன வயலை நோக்கி

## மச்சாள் வந்தாள்

வண்டிபோய் கோயிற்பாதை
வளைவிலே மறையுமட்டும்
நின்று பார்த் தலுவல் எண்ணி
நேரமாச் சென்று பொன்னு
மண்டபத் துள்ளே போன
மறுகணம் நாய்குரைக்கக்
கண்டனள்; எட்டிப்பார்த்தாள்;
கனகம்மா நான்தா னென்றாள்.

வாமச்சாள், வாகா உள்ளே!
வழியிலே நாங்கள், கள்ளி
ஊமத்தை நட்டா வைத்தோம்
உறவெல்லாம் போச்சே மச்சாள்
சேமத்தை விசாரிக் காதே
சிணுங்கினாள் பொன்னு; 'சும்மா
போமச்சாள்' கனகம் மாதன்
புன்னகை மொழியால் சொன்னாள்.

என்னவோ.... கனகம்! வா வா
இப்படி வந்து உட்கார்
என்று கற் பன்னில் பாயை
எடுத்தங்கு விரித்துப், பொன்னு
சென்றனள் உள்ளே வட்டா
செப்பமாய்க் கொண்டு வைத்து
ஒன்றுண்டு அலுவ லென்றே
ஓடினாள் அடுப்படிக்கு.

கோப்பையில் பழம், பண்டங்கள்
கொண்டு செம்போடு வைத்து
'சாப்பிடு மச்சி' யென்று
சந்தோஷம் பொங்கக் கூறி,
கோப்பியும் கொண்டு வந்து
கொடுத்த பொன் னம்மா நிற்கக்
கூப்பிட்டு அருகில் வைத்தே
கூறுவாள் கனகம் செய்தி.

மருமகள் அன்னம் புத்தி
அறிந்தனள்; மற்றவர்க் கெம்
கருமங்கள் செய்யும் பெத்தா
கண்ணியை விட்டு சொன்னோம்
உரிமைக் காரருக்கு மட்டும்
ஒருத்தி நான் சொல்ல வந்தேன்
சரி மச்சி வருகிறேன் போய்,
தலைக்குமேல் அலுவல் உண்டு.

வெற்றிலை போட்ட பாதி
வெள்ளிக்கிட்டாள் கனகம், கொண்ணர்
சற்றுமுன் தானே போனார்
சரியான கோபத்தோடு
எத்தனைக் கென்று நீயும்.....?
என்று பொன் னம்மா சொல்லக்
குற்றத்தைப் பொறுப்பீர் என்று
கூறியே கனகம் போனாள்.

## பொழுது போனது

படுவானில் குருதிச் சேற்றில்
பரிதி போய் விழவும், கண்டு
கடுகேனும் கவலை யின்றி
கதைபல பேசி 'இன்ப
மடுவில் தேன் வாழ்க்கை' யென்றே
மகிழ்ச்சியில் கூவி, நீண்ட
தொடுவான இலக்கில் நீந்தும்
தூயவெண் பறவைக் கூட்டம்.

சூடுபோ டுதற்காய் நேற்றுச்
சொல்லிய ஆட்கள் வந்தார்
மாடுகள் தொடுக்க வேண்டும்
மகிழடிக் குளத்துக் குட்போய்!
காடு பற்றியது போலக்
கதிரவன் மேற்கே சாய்ந்தான்
வீடுபோ யிருக்கும் அப்பன்
விசர்! இன்னும் திரும்ப வில்லை!

பரணிலே ஏறி நின்று
பார்த்த செல்லையா, தூரத்
துறையடி வழிப்பா டன்றித்
துள்ளிப் பாய்ந்தோடி யோடி
வருகிற வரத்தில், காய்ந்த
வழியிலே புழுதிக் குன்றில்
மறையுமோர் வண்டி கண்டு
மனதிலே தெம்பு கொண்டான்.

தூரத்தே சதங்கை நாதம்
தூறுதல் கேட்டு, மீண்டும்
பார்வையைச் செலுத்த, வண்டி
'பாவங்கை' வழியில் கண்டான்
ஆரது அப்பன் தானா?
ஆம்; கூட, சாமி! வண்டிக்
காரன்தான் அரக்கு மாட்டைக்
கட்டவும் ஏற்ற ஆள்தான்.

இறங்கினான் பரணை விட்டு
ஏய்தம்பீ! செல்லை யா........ டேய்!
பறந்து வா இங்கே, வண்டி
பாவங்கைச் சுரியில் நல்லாய்
இறங்கிற்று! கந்தப்போடி
இப்படிக் கத்த, கொஞ்சம்
இறங்கித்தான் நடந்தாலென்ன?
என்றங்கு விரைந்தான் செல்லன்.

போன போக்கினிலே கந்தப்
போடியார் கையைப் பற்றி,
ஏனப்பா சுணக்கம்? என்று
இறக்கி நேர் வரம்பில் விட்டான்.
கூனிப்போய் நின்ற வண்டி,
'கொள கொள' வென்று சேற்றில்
தானாக நடக்கச், சாமி
தனக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

வண்டியை விட்டுப் பாதை
வரம்பிலே குதித்தான் சாமி
கொண்டு வந்துள்ள சாக்குக்
குஞ்சுவாய், மரக்கால், லாம்பு,
வெண்கலக் குடம் நீ ரோடு,
வெற்றிலை, உமல், சாராயம்
இன்னின்ன பொருளி தென்று
இறக்கியும் கீழே வைத்தான்.

இறக்கிய பொருளொவ் வொன்றாய்
எடுத்துப் போய் குடிலுக் குள்ளே
முறைப்படி, வைத்தான்; சோற்று
மூட்டையை எடுத்த செல்லன்
அரக்கனைப் பிணைக்கப் போனேன்
அடங்காத பிடாரி மாடு
துரத்தப் பார்த் தது; போய் நீதான்
தொடுத்துவா சாமி என்றாள்.

மாட்டினை உருவிக் கொண்டு
மடுவில் நீர் காட்டி, வைக்கோல்
போட்ட பின் கணுவில் கட்டி,
புகையிலை கிள்ளி, பல்லைத்
தீட்டி உள் திணித்த சாமி
செல்லனைப் பார்த்துத் தம்பி
கேட்டியா சேதி உன்றன்
கிளியல்லோ சமைந்த தென்றான்

ஆரைடா சாமி நீ போய்
அவனது கிளியாள் என்றாய்
பேரையே மாற்றி வைப்பேன்
பெருங்கொலை நடக்கும்; இந்த
ஊரெல்லாம் சொன்னார்; நானும்
ஒருவனங் கிருந்தேன்; என்று
பீரங்கிக் கந்தப்போடி,
பெருங்குர லெடுத்துச் சொன்னார்.

விட்டுத்தள் போடியாரே
விசளம், நாம் வந்த பின்னால்
கிட்டியும் இருக்கக் கூடும்
கேவலம்! இதற்காய்ச் சொந்த
ஒட்டுற வறுத்துக் கொண்டால்
ஊரெல்லாம் என்ன சொல்லும்!
பெட்டையும் கிளிதான்; சொத்துப்
பெருஞ் சொத்தே யென்றான் சாமி.

வலியவந் தெனக்கு மாறாய்
வழக்காடித் தோற்ற கோபம்
அழகிப் போடிக்கும் பெண்டில்
அவளுக்குப் பழியார் மேலே
எழியவன் எனக்கும் சொன்னால்
என்னவாம்? செல்லனுக்கு
கலியாணம் பாண்டி யூரில்
கணபதிப் போடி வீட்டில்!

செய்யாது போனால் என்னைச்
செருப்பெடுத் தடிடா சாமி
பொய்யில்லை யென்று கந்தப்
போடியார் செருமக் கண்டு,
கையிலே கயிறும், மற்றக்
கமுக்கட்டில் கேட்டி யோடும்
ஐயையோ என்ற சாமி
அரக்கனைப் பிணைக்கப் போனான்.

என்னடா யோசிக்கின்றாய்?
எழுந்து போய்ச் சோற்றைத் தின்னு
பின்னாலே தெரியும்! கூடப்
பிறந்தவள் இவளா? சொந்த
அண்ணனை மதிக்க வில்லை.
அறிவு கெட்டதுகள்! இந்த
அன்னத்தை போலே ஊரில்
ஆயிரம் பெண்க ளுள்ளார்.

## தயிரில் அன்னம்

அப்பனின் கோபம் வீட்டில்
அம்மைக்கும் அடியோ? செல்லன்,
இப்படி நினைத்துக் கொண்டு
எழுந்து போய்க் குடிலுக்குள்ளே
செப்புச் சட்டிக்குட் சோற்றைத்
திறந்ததும், தயிர்ச் சட்டிக்குள்
'எப்படி மச்சான்' என்றே
இளித்தனள் அன்னம் நின்று.

ஊருக்குள் மேட்டு வட்டை
உழுது கொண் டிருந்த போது
ஆருக்குச் சோற்றுப் பெட்டி
அடியன்னம்? என்று கேட்க
ஆருக்கென் அப்பனுக்கு!
அது தெரி யாதா? என்று
போருக்கு வந்தென் னுள்ளே
புகுந்தவள் நீயா அன்னம்!

மார்புக்குள் இருக்கும் பிஞ்சு
மாதுளங் காய்கள் ரண்டும்
ஆருக்கு? என்னக் கோபித்
தையையோ வம்பூ! என்று
நேருக்குப் பார்த்த கண்ணை
நிலத்திலே புதைத்து விட்டு
மேலுக்கு விரலால் சீய்த்து
மிரண்டவள் நீயா அன்னம்?

குருவிக்குத் தகரம் கட்டி
கூய்யெனத் துரத்து மென்றன்
அருகிலே, மடியை மெல்ல
அவிழ்த்தவல் அள்ளி என்முன்
தருகையில் கையைப் பற்றத்
தடுக்கியே வரம்பில் சாய்ந்தாள்!
இருகையால் தூக்கிக் கொஞ்ச
இடித்தவள் நீயா அன்னம்!

கோபமா மச்சான்? என்று
குறுநகை புரிந்து, என்னை
ஆவலோ டுற்றுப் பார்த்து
அதோ அந்த விரிந்த அல்லிப்
பூவினைப் பறித்துத் தா; நான்
போகவும் வேண்டும், என்ற
பூவர சீன்ற கன்னி
பூத்ததாம் மெய்யா அன்னம்.

போட்டாவின் வரம்பால் வெள்ளைப்
புறாவொன்று நடந்தாற்போல
நாட்டிய மாடி வந்த
நளினத்தைக் கண்டு, சத்தம்
போட்டொரு வரால்மீன் துள்ளிப்
'பொக்' கென நீரில் பாய்ந்து
ஓட்டமாய் ஓட அஞ்சி
ஓடிய அன்னம் நீயா!

மனதுக்குள் இவ்வாறெல்லாம்
மறுகிய செல்லன், அப்பர்
சினத்தினை எண்ணி மேலும்
சிந்தனை வசத்தனாய், இக்
குணத்தினை மாற்ற என்னால்
கூடுமா என்றா ராய்ந்து
கணத்திலே வெளியே வந்து
கை வாயை அலம்பு கின்றான்.

## களம் பொலிந்தது

சாப்பிட்டா யிற்றா? எங்கே
சாமிபோய்த் தொலைந்தான்? நீ போய்க்
கூப்பிட்டுப் பாரரக்கைக்
கூட்டியும் புதைக்க வேண்டும்.
ராப்பட்டுப் போச்சு லாம்பை
'டக்' கென்று கொளுத்து; அங்கோர்
பூப்போட்ட கைப்பெட் டிக்குள்
பொருட்களை எடுத்துவா; போ!

என்றப்பா சொல்ல, செல்லன்
எழுந்து போய்க் குடிலுக்குள்ளே,
பொன், வெள்ளி, தங்கம், ஐம்பொன்
பூசனச் செல்லாக் காசு,
மின்னுமஞ் சாடிக் கொட்டை,
மேம்படு பவளம், சங்கு
தென்னங்கள் சாராயத்தோ
டிடம் புரி வலம் புரிக் காய்.

அறுமுகக் காயும் வைக்க
அளவான தூக்குச் செம்பும்
பொறுமையாய்த் தேடிக் கண்டு
'பொலிகளம்' வைத்தான்; சூட்டின்
அருகு நின் றலுவ லாளர்,
அரக்கினைப் புதைப்பீர் என்றார்;
கருமமே கண்ணாய், செம்பைக்
களத்திலே புதைத்தார் கந்தர்,

பூதங்கள் பொலியை அள்ளிப்
போகாதவாறு காத்து
ஆதர வளிக்க வேண்டும்
ஐயனே! என்று வேண்டிச்
சேதமில் லாத வண்டிச்
சில்லள வுறட்டி வைத்து
மேதகு மடைபரப்பி
வயிரவ வணக்கஞ் செய்தார்.

காரியகாரர் சூட்டைக்
காவல்பின் களத்தில் தள்ள
வாரிக்காலனையும் கொண்டு
வந்தனன் சாமித்தம்பி
நேரிய கேட்டி யோடு
நின்ற ஆள் ஒலியைக் கேட்டு
ஏறின வாரிக்காலன்
ஏழெட்டுப் பிணையில் மேலே

வாரிக்காலா ஓ........ ஓஓ!
வளைந்த கொம் பா ஓ...... ஓஓ......!
ஏறிப்போ ஏறிப் போ ஓ.........
எந்தாயே பூமித் தாயே
ஊரிலே பஞ்ச மோட
உன்மடி பொலி ஓ! ஓஓ.........!
சாரிலே நடம்மா தாயே
சந்தானம் பொலியே ஓ......ஓ!

கோயில்கள் கொடியேறட்டும்
குரவையும், கூத்தும், பாட்டும்
வாயில்கள் தோறும் ஊரில்
வளரட்டும் பொலியே ஓ! ஓ!
தாயில்லாக் குமர்க ளுக்கும்
தாலிகள் கழுத்திலேறி
தாய்மையால் உலகில் இன்பம்
தழைத்திடப் பொலியே ஓ. ஓ........!

ஆறில்லை, மாரியில்லை
அறமில்லை என்ற வார்த்தைத்
தூறலில் லாமல் வாழ்வில்
தொய்வுகள் என்று மில்லை
சோறில்லை என்று யாரும்
சொல்லாமல், உழுவார் வாழ்வோர்!
பேறென்று பெரியார் சொன்ன
பெற்றியில் பொலி ஓ! ஓஓ.........

சுற்றமும் விருந்தும் பேணி
சுகங்கண்டு, வாழ்வில் என்றும்
மற்றவர் துயரம் எண்ணி
மனத்தினால் உருகி, அன்பைக்
கற்பிப்போராக வாழும்
காட்சி கண் டுவந்து, விட்ட
நற்றவத் தவர்கள் கூட
நமைநத்தப் பொலி ஓ! ஓ........ ஓ........!

வசைப்பாட்டுப் போலல் லாது
வாய்மையில் கனிந்து வந்த
இசைப்பாட்டில் மயங்கித் தங்கள்
இதயத்தை ஈந்து, சாய்ப் போன்
வசைப்பட்ட வாரிக் காலன்
வளைந்தது கதிர்கள் வாயில்
அசைப்பிடும் ஓசை பாட்டுக்
கமைந்ததோர் தாளம் ஒக்கும்!

மண்ணாகி, உழுதோர் வேர்வை
மழையினால் பொதும்பி, சேறாய்
பண்ணாகி, புலவர் உள்ளப்
பசுமையாய் வளர்ந்து, நாணும்
பெண்ணாகி, மணியாய், வைக்கோல்
பேழையில் நிறைந்த முத்தம்
பொன்னாகி எருமைக் காலில்
பொலிந்தது களம் பூரிக்க.

வெள்ளம் வேண்டு மென்று கேட்டால்
வேறென்ன கருத்து? தென்னங்
கள்ளுஞ் சாராயமுந் தான்
களத்திலே சோற்றில் குந்தி
'கள்ளனே இல்லை' யென்ற
காரிய கார ருக் கென்
னுள்ளம் போல்! என்றார் கந்தப்
போடியார் உவகை பொங்க.

அண்டங் காகத்தை வென்ற
அகண்டவாய் திறந்து வைத்து
வண்டென இரைந்து நீண்ட
வாயுவும் தெரியா னாகி,
வண்டியில் சாமித் தம்பி
வசதியாய்த் தூங்கு கின்றான்
என்றொரு பணியாள் சொல்ல
எல்லோரும் சிரித்துக் கொண்டார்.

உண்டபின் வாயில் போட
ஒருகணம் உட்கார்ந் தார்கள்,
அண்டையக் களங்கள் காட்டும்
அமளியைக் கேட்டு, மீண்டும்
முண்டாசு தலையில் கட்டி
முன்போல வேலை மீது
கொண்டார்கள் கவனம்; செல்லன்
கொட்டாவி யொன்று விட்டான்.

கையிலே வேலைக் காரன்
கம்பினை எடுத்தார். சூழப்
பொய்ப்பதர் அன்றி, உண்மைப்
பொலி உதிர் வைக்கோல் கோலி
வைத்தனர் வட்டமாக
வாட்டினார் போடியாரோ
செய்யுங் காரியத்தை நல்ல
செப்பமாய்ச் செய்யு மென்றார்.

வாட்டிப்பின் வைக்கோல் கட்டி
வரிசையில் அடுக்கி, ஓரச்
சூட்டினைக் கூட்டி, வாரிக்
காலனை மறுகால் ஏற்றிப்
போட்டதும் பாதிச் சூடே
பொலிந்ததோ, வானின் தாரைக்
கூட்டத்தை யெல்லாம் கூட்டிக்
குவித்தது போலத் தோன்றும்.

கூழனைப் போக்கி, நெல்லைக்
கூட்டியொன்றாக்கி, பார
ஆலத்தி வட்டி போல
அமைந்திடும் பொலிக்கும் பத்தில்
வேலையாட் கம்பு, வில், பொல்,
வெட்டுவா யனையும் வைக்கக்
காலைப்பெண் எழுச்சி பாடக்
காக்கையார் எழுந்து விட்டார்.

வாழ்வாரைப் பார்த்து நெஞ்சு
வதைவார்போல் அல்லி கூம்ப
தாழ்வுற்றும் கலங்கா வாய்மைத்
தாமரைக் குலத்து மாதர்
கீழ்வானச் சிவப்பி லுள்ளங்
கிறங்கித் தம் இதழ் கசிந்தார்
நீள்வானத் தெருவில் தேரை
நிறுத்தினான் பரிதிக் குஞ்சன்!

அன்னம்மா கனவின் கோவை
அறிந்திட்ட அலுப்பி லூறி
என்னப்பா விடிந்தா போச்சு?
எங்குற்றார் வேலையாட்கள்?
என்றெழுகின்றான் செல்லன்
'எருமைகள் கறந் தாயிற்று
பொன்ன னூர்போனான் பாலைப்
போக்காட்டி விட்டேன்; போ போ.

கண்ணை முன் கழுவு நம்மூர்
காத்தியர் கைம்பெண் சாதி
சின்னியின் புளிச்ச அப்பம்
தின்னு; நான் இங்கே சற்றுக்
கண்களை மூட வேண்டும்
களத்திலே பொலி, ஊர்க்காலி
தின்னவுங் கூடும்!' என்றே
போடியார் உறங்க லானார்.

எட்டுநாள், களத்தில் ஓயா
எடுபிடி அமளி ஓய்ந்து
பட்டடைப் பொலி மதிக்கப்
பட்டது. கணக்கன் சின்னான்
எட்டுநாட் பொலியும், மொத்தம்
எண்பத்தைந் தவணம் என்ன
தட்டினான் வயிற்றில் சாமி
தனக்கும்மூன் றவணம் ஏர்வை!

## கணக்குகள் தீர்த்தார்

சூடுபோட்டவர்க்குக் கூலி
சொல்லிய படியே தந்து,
மாடு மேய்ப்பவர்க்கும், கோயில்
மடங்கள் மேய்ப்பவர்க்கும், என்றும்
பாடுபட் டுழையா துண்டு
பஞ்சம் மேய்ப்பவர்க்கும், கொத்தாய்
கூடி நெற் குலைகள் கோதும்
குருவிமேய்ப் பவர்க்கும், கந்தப்
போடியார் விருப்பம் போலப்,
பொலியிலே பங்கு செய்தார்.

வட்டைக்கு விதானை யான
வடிவேலின் பங்கி தென்று
எட்டளந் திடவும், எங்கே
என்பங்கை இதற்குள் என்று
நெட்டைமா மரமாய் நின்ற
மாசிலான் அதிகாரிக்கும்
கொட்டினார் அளந்து; பின்னால்
கூப்பிட்டார் நின்ற பேரை.

ஐயர்க்கு மரக்கால் மூன்று,
அம்பட்ட முல்லைக் காரன்,
பொய் மூட்டை சுமக்கும் தண்டல்
காரனாம் வண்ணா னுக்கும்
ஐவைந்து மரக்கால், போன
ஆண்டொன்றின் கூலி தந்து
கைம் பெண்கள், சிறுகு லத்துக்
கன்னியர் கணக்கும் தீர்த்தார்.

## களவட்டிப் பொங்கல் வைத்தார்

அந்திப்பால் கறந்து வந்த
ஆளிடம் அடுப்பு என்றார்
கந்தப்பர்; குறிப்புணர்ந்து
களி மண்ணால் அடுப்பு மூட்டிக்
குந்தினான் அரிசரிக்க;
கொசுகி நீர் களையப், பாலும்
பொந்தினுள் சினந்த நாகம்
போலெழுந் தடுப்பைத் தீண்டும்

பொங்கிய பாலில் அள்ளிப்
போய்ப்புதை அரக்கி ருந்து
தங்கமே பொலிய வைத்த
'தாய் மடி குளிர்க' வென்றே
தங்கையால் ஊற்றி, முடித்
தலையிலே குட்டிக் கொண்டு
மங்களம் பாடி, பொங்கல்
வழங்கினார் கந்தப்போடி.

வில்லங்க மின்றித் தங்கள்
வினை யிலே மறைந்து, காக்கும்
பிள்ளையார்ப் பெருமானுக்கும்
பெரு நன்றிப் படைய லாக,
வெள்ளையாய் எருமைப் பாலில்
விளைந்த தீம் பொங்கல், வேண்டிப்
பிள்ளை வெண் ணிலவு வானில்
பிறந்து கை நீட்டி நிற்கும்.

## ஊருக்குப் புறப்பட்டார்கள்

வட்டையில் குன்று குன்றாய்
வளர்ந்துயர் வான உச்சி
முட்டிய சூடு யாவும்
முடிந்தன; காளை கொண்டு
கட்டப் பொன் மூட்டை கொண்டு
கரத்தைகள், ஊரை நோக்கி
மட்டிலா மகிழ்ச்சி யோடு
மணியினைக் கிலுக்கிச் செல்லும்.

அணிமுகைச் செழுமை அல்லி
அவிழவும் ஆண்டார் நீண்ட
பிணி நீங்கி உடம்பு தேறும்
பிள்ளை போல் தவழ வானில்
அணியாக ஊரும் வண்டி
அணியத்தில் உழவர் கூட்டம்
'கணீரெ' னும் குரலில் நெஞ்சின்
கனவினைக் கவிதை செய்தார்.

சின்னப் போடியாரே தம்பி
செல்லையா! என்ன தூக்கம்?
உன்னொத்த பொடியனெல்லாம்
ஊரிலே மச்சி மார், தம்
கன்னத்தைக் கொஞ்சு மாப்போல்
கவி கட்டிப் பாடுகின்றார்!
அன்னத்தைப் பற்றி நீயும்
அதிலென்ன வெட்கம் பாடு!

சண்டியன் சாமி சொல்ல
சலிப்புற்று மூச்சு விட்டு
கண்டாயே சாமி, அப்பன்
காளியாய் எடுத்த கோலம்!
நொண்டிநான் கொம்புத் தேனை
நோக்குவ தாலே ஏதும்
உண்டாமோ லாபம்? என்றான்
ஊமையா யிருந்த செல்லன்

அப்பனை விடுசெல்லா; நீ
ஆண்பிள்ளை! அன்னம் மட்டும்
ஒப்புதல் தந்தால் போதும்,
ஊரெல்லாம் எதிர்த்து வந்து
தப்புத்தண்டா செய் தாலும்
தகர்த்துங்கள் கலியாணத்தைச்
செப்பமாய் முடிப்பேன் என்று
தீர்மானம் சொன்னான் சாமி.

# சாமியின் திருக்கல்யாணம்

'எப்படி'? யென்ற செல்லன்
எழுச்சியைக் கண்டு, கேள் கேள்
கற்பகம் என்றால் பார்க்கக்
கண்களா யிரங்கள் வேண்டும்!
அப்படி அழகி; என்றன்
அவளைத் தான் சொல்லு கின்றேன்;
இப்பொழுது திளைத்துப் போனாள்
இளமையில் பார்க்க வேண்டும்!

வன்னிய கோத்திரத்தில்
வந்தவள்; எனக்கும் மீசை,
அன்னேரம் அரும்பு; வேலி
அளப்பதும் தொழில்! ஓர் நாளில்
பின்னேரம் ஒழுங்கைக் குள்ளே
பெட்டையைக் கண்டு, சும்மா
கண்ணை அப்படி யென்றேனா
காறாப்பித் துப்பி விட்டாள்!

கற்பகம் இரு! நான் உன்னைக்
கட்டாது போனால், என்றன்
'அப்பனின் பெயரை மாற்றி
அழை' யென்று சபதம் கூறி
முப்பனைப் பறையன், கண்ணி
முப்பனைப் பிடித்தேன்; சேத்தி
முப்பது பவுனுக் குள்ளும்
முடிக்கலாம்' என்று சொன்னான்.

பட்டோலை போட்டான், பச்சைப்
பாம்போடு கன்னிக் கோழி,
முட்டை, தென் னையிலே ஆக
முதல் முதல் பிடித்த தேங்காய்க்
கொட்டைகள், கோழி ரத்தம்,
கொடிவகை, பித்து, மூலி
எட்டுறாம் போத்தல் மூன்று
இப்படி ஒன்றா? ரெண்டா?

பூசாரி போட்டுத் தந்த
பொருளெலாம் தேடிக் காண
மாச மொன்றாச்சு! மற்ற
மாசமும் முடியக் கிட்ட
வாசமாய் வசிய எண்ணெய்
வார்பண்ணி, ஈர்க்கில் தொட்டுப்
பூசினால் போது மென்று
புழங்குமோர் முறையும் சொன்னான்.

மடைவைத்து மந்திரித்து,
மனைக்கப்பால் தீட்டாகாத
இடமாக மடுவில் வைத்து,
ஏற்றதோர் சமயம் பார்த்து
வலதுகால் விரலில் ரத்தம்
வடித்தெண்ணெ யோடு கூட்டி,
கடவலில் நின்றாள் ஓர் நாள்
கற்பகம், பூசி விட்டேன்.

கண்ணியின் வசிய மென்றால்
கடவுளே வந்து மாற்றுப்
பண்ணினால் கூட, ஒன்றும்
பலன்வரப் போவதில்லை!
எண்ணிநாள் மூன்றாகும் முன்
எனைக் கண்ட கற்ப கத்தின்
கண்ணுக்குள் என்னைக் கண்டேன்
கருத்தையும் அறிந்து கொண்டேன்.

கூத்துப்பார்ப் பதற்காய் அப்பன்
கோயில் வெட்டைக்குப் போனார்;
மூத்தம்மை மாலைக் கண்ணி;
மூன்றுபேர் தாமே நாங்கள்;
ராத்திரி முழுவதும் நான், ஓர்
ரகசியம் உனக்குச் சொல்லக்
காத்துக்காத் திருந்தேன் எங்கள்
கடப்படி மூலைக்குள்ளே!

கற்பகம் சொன்ன இந்தக்
கதையினைக் கேட்ட பின்னும்
எப்படித் தரிப்பேன்! இன்றைக்
கிரவங்கு வருவேன் என்றேன்
அப்பனில் லாத நேரம்!
அவசியம் என்றாள்; மூப்பன்
செப்பிய படியே சேத்தி
சீக்கிரம் பலிக்கக் கண்டேன்!

கருக்கலில் கூத்துக் காரர்
களரி மத் தளத்தைத் தட்ட
பொருக்கர், கற் பகத்தை, பெத்தா
பொறுப்பிலே விட்டு, விட்டு
'விருட்' டென்று வெளியே போவார்
வேலிக்குள் நின்ற நானோ
அசுப்பின்றி நுழைவேன் வைக்கோற்
போருக்குள் அவளும் நிற்பாள்

கூத்தெல்லாம் முடியச் சாமக்
கோழியும் கூவும்; உள்ளே
சாத்துவாள் கதவை நான் போய்ச்
சறுகுவேன் ஒழுங்கைக் குள்ளே!
காத்திருந் தலுத்த அம்மை
கண்டதும் சோறு போட்டுக்
'கூத்தென்ன பருவம்'? என்பாள்
குறையில்லை அம்மா என்பேன்

## வண்டி புதைந்தது

வண்டிகள் ஏனோ சற்று
வழியினில் சுணங்க, மாடு
முண்டியும் இழுத்துச் சோர்ந்து
மூச்செறி வதனைக் கண்டு,
சண்டியன் சாமி கீழே
சரேலெனக் குதித்துத் தோளால்
முண்டியல் கொடுத்து மாட்டை
முடுக்கினான் சில்லைச் சுற்றி.

புல்லிலே போகு மட்டும்
பொறுப் புத்தான் பொதும்பற் சேறு
செல்லனும் கீழே துள்ளி
சில்லினைப் போட்டான்; வண்டி
மெல்லவாய் அசைய, மீண்டும்
மேலுக்கே ஏறிக் கொண்டு
நல்லது சாமி, மேலே
நடந்தவை சொல்வாய் என்றான்.

## கதை தொடர்ந்தது

பிறகென்ன..... ஊரார் வாயில்
பேச்சுக்கா பஞ்சம்! ராவில்
அறையிலே நடந்த தெல்லாம்
அம்பல மாக, அப்பன்
முறுகினார் பொருக்கருக்கோ
மூக்குக்கு மேலே கோபம்
கறுவினார்; கற்பக த்தைக்
கண்டித்தார்; 'வசிய' மென்றார்.

காய் வெட்டிக் கழிக்க, மூப்பன்
கண்ணியே வந்து போனார்
சீயிந்தக் கஞ்சாங் கொற்றிச்
சாமிக்குக் கொடுக்கும் பெண்ணை
நாய் வரும் கடப்பில் கட்டி
........ ......... ......... .......... ................
கூயென்றார்; வன்னியர் தம்
கோத்திர வரிசை சொன்னார்.

பொருக்கர் பொன் னம்ப லத்தார்
பொக்கைவாய் அடைக்க ஏற்ற
இருத்தையும் மழையும் சேர்ந்த
இருட் டொரு முட்டிக் கள்ளை
இறக்கிவிட் டெதுவந் தாலும்
இரண்டிலே ஒன்றின் றைக்கு!
புறப்பட்டேன், வில்லுக்கத்தி
பொக்குழில் செருகிக் கொண்டேன்.

வேலியால் ஏறி, வீட்டு
விறாந்தையில் காலை வைத்தால்
பாலிப் பெத் தாவும் எங்கோ
பாய் தூக்கி யிருக்கக் கண்டேன்
காலினால் குறிப்புக் காட்டக்
கற்பகம் கத விடந்தாள்
நூலூசிக் குள்ளே போகும்
நுண்மையாய் நுழைந்தேன் உள்ளே!

ஏன் பெட்டை கதவிந் நேரம்
எதற்காகத் திறந்தாய்? என்று
கூன் மாமன் பொருக்கர் கேட்டார்.
குடிவெறி எனக்கும், துள்ளி
'நான் வந்தேன் மாமா' என்றேன்
நாய் கெட்ட கேட்டுக் கிங்கே
'ஏன் வந்தாய்'? என்றார். இன்று
'என் கத்திக் கிரைநீ' என்றார்.

கற்பகம் அடியேய்! அந்தக்
கதவினைத் திறடீ வேசை
இப்பொழு துன்னை வெட்டி
எறிகிறேன் ஆற்றுக் குள்ளே!
இப்படிக் கூறி மாமன்
இடிக்கிறார் கதவை; கேட்டு
சுற்றவும் இருந்தோர் வந்து
சூழ்ந்தனர்; சொல்லு கின்றார்!

அவரவர் தலையெழுத்தை
ஆராலும் மாற்ற ஒண்ணா!
அவளுக்கும் விருப்பம்; சாமி
அவனுக்கும் விருப்பம்; நீயேன்
கவலைகொள் கின்றாய்? இன்றே
கசாதினை எழுதிப் போடு!
சிவ தம்புத் தோம்பு தோரைச்
சீக்கிரம் அழை யென்றார்கள்.

வண்ணக்கு, தோம்பு தோரும்
வந்தார்கள் விதானை யோடு;
திண்ணையில் நின்று, பிள்ளை
திற வடி கதவை யென்று
என்னையும் கூப்பிட் டார்கள்
இருவரும் இணக்கம் சொன்னோம்
மண்ணிலே அள்ளி, மாமன்
மண்டையில் போட்டுக் கொண்டார்.

பூமியை பொருளை யெல்லாம்
பொதுவிலே எழுதி வைத்துச்
சாமியாய்ப் போனார் மாமன்!
சரிக்கட்ட விலையா நானும்?
மாமனு மாகி மூத்த
மகளுக்கு மகனும் கண்டேன்
ஓமம்பி! என்றான் சாமி
ஒப்பினான் செல்லை யாவும்.

## அம்பலத்தடியில் இளைப்பாறினர்

கதையினை நிறுத்தி, மாடு
களைத்துப் போய் விட்ட தம்பி
மதகடி அம்பலத்தில்
மாட்டினை அவிழ்த்துத் தண்ணீர்ப்
பதை பதைப் பாற்றி, நாமும்
கால் கையை நிமிர்த்திக் கொண்டு
உதயத்தில் ஊர் போய்ச் சேர
உருட்டலாம் வண்டி என்றான்.

அம்பலத் தடியில் வண்டி
அதிகமோ? வயலோரத்தில்
வம்மியின் அருகே எங்கள்
வண்டியை நிறுத்தச் சொல்லு.
இம்மட்டும் கதைத்தோ மா நாம்!
இலுப்படிச் சேனை வட்டை,
கம்மாளன் வெளியும் போச்சு
கதை நல்ல கதைதான் சாமி!

செல்லையா சொல்லச் சாமி
செருமினான், ஆண் பிள்ளைக்கு
இல்லையா ரோசம்! என்று
இடைக்கிடை நரைத்த, கோரைப்
புல்லைப்போல் மீசை பற்றிப்
புரியாக உருட்டிக் கொண்டே
செல்லனைப் பார்த்து வீம்புச்
சிரிப்பொன்று, சிரித்துக் கொண்டான்.

அம்பலத் தடியில் வண்டி
அவிழ்த்தனர்; களவெட்டிக்கு
பொங்கிய புக்கைப் பெட்டி
போனது வயிற்றில், அள்ளி
அம்பலப் பூவல் நீரை
அருந்தித் தம் கொட்டைப் பெட்டித்
தம்பலம் போட்டார், மாடு
தவிடுண்ணும் வரையில் விட்டு.

## நிலவு மறைந்தது

உலை மூடி மலையி லுள்ள
உல்லாச மாளிகைக்குள்
நிலவு போய் உறங்கி விட்ட
நிசி, பிறர் மாடு பூட்டும்
கலவரம் கேட்டு, சாமி
கால்களைக் கிள்ளி என்ன
உலகத்தை மறந்த தூக்கம்
உனக்கென்று சொன்னான் செல்லன்.

## வண்டி போட்டார்

கோழித் தூக் கத்தை விட்டுக்
கொடுகிய படிபோய், சாமி
காளைகள் சாய்த்து வண்டி
கட்டினான், வண்டிச் சில்லில்
காலைவைத் தேறிக் கொண்டு,
கவனமாய் ஏறு னக்கோ
பாழான தூக்கம்! என்று
பகிடியாய்ச் சொன்னான் செல்லன்.

மாடுகள் முதுகைக் கேட்டிக்
கம்பினால் தடவி, இம்... இம்
ஓடுங்கள் ஊருக் கென்றே
ஒரே தாவில் மேலே ஏறி
பாடு செல்லையா கூத்துப்
பாட்டிலே, கேட்போம் என்று
மூடினான் தலையைச் சால்வைத்
துண்டினாற் சாமித் தம்பி.

தொண்டையைத் திறந்தான் செல்லன்,
துறையடி வரையும் போன
வண்டியிற் பொடிய னெல்லாம்
வாயினை மூடிக் கொண்டு
உண்டார்கள் செல்லன் பாட்டை
ஊருக்கும் கேட்கும் உன்றன்
'கண்டமே கண்டம்' என்று
கைத் தாளம் போட்டான் சாமி.

புளியடி வட்டை தாண்டி,
பூ நாகஞ் சோலை தாண்டி
களிமடு, மானுரித்த
கல் வயல், ஆலா வட்டை,
குளவெளி, முங்கி வாறு,
கொறுக்கச்சிக் குடாவும் தாண்டி
குளக்கட்டின் மேலே வண்டி
குமர் நடை பழகிச் செல்லும்.

## துறையினைக் கடந்தார்

முட மரு தடியில் வந்து
முடக்கிலே கிறுகி, வண்டி
இடதுகை வழிப்பாட்டில் போய்
இறங்கிற்று: இது வரைக்கும்
'கட கட' வென்று போன
கரத்தைகள் நிறுத்தச் செல்லன்
அட! துறையடியா வென்று
அத் துடன் பாட்டை விட்டான்.

துறைக்கார முருகன் செய்யும்
தொண்டுக்குக் கூலியாக
இறக்கினார் களத்தில் வைத்தே
எடுத்துவைத் திருந்த நெல்லை,
'சுறுக்' கென்றான் சாமி: வண்டித்
தொடுவையை ஏற்றிக் கொண்டு
புறப்பட்ட தாற்றிற் பாதை
போடுவார் கம்பை ஊன்றி.

‘கொக்கரக் கொக்கோ’ வென்று
கோழிகள் குழல்வா சிக்கப்
பக்கத்தூர் நாய்கள் பாட்டுப்
பாடின! அதற்கு நாணி
வெட்கப்பட் டதுபோல் வானில்
விடி வெள்ளி முளைக்க, பாதை
அக்கரை தட்டி நின்ற;
‘தரோகரா’ என்றான் சாமி.

துறையூரை விட்டு வண்டி
தொடங்கிற்று நடையை: சில்போய்
அறை கையில் அழிப் பெட்டி
அலறும்பே ரோசை ஊரில்
உறைகிற வறுமைப் பேயை
ஓட்டுமோர் முரசமாகி
நிறையவும், ஊரின் நெஞ்சில்
நினைவுகள் பூத்துக் காய்க்கும்!

## பார்வதிப் பெத்தா எழுந்தாள்

ஊர் நெருங்கியதே யென்ற
உவகையால் உந்தப்பட்டு,
ஏருழும் இளைஞர் செய்த
இலக்கியப் பாடல் கேட்டு
ஊர் எழுந்ததுவோ? இல்லை
உறங்கிற்றோ? எதுவென்றாலும்
பார்வதிப் பெத்தவுக்கோ
படுக்கையே பிடிக்கவில்லை.

## நினைவுகள் குதிர்ந்தன

*சித்திரை பிறந்தால் நல்ல*
*செஞ்செழிப் புலக மெங்கும்*
*எத்தனை கூத்து ஊரில்*
*இரவெல்லாம் தாளக்கட்டுச்*
*சத்தந்தான்! வயல்களெல்லாம்*
*சாக்குச் சாக் காக வாரி*
*முத்தினை இறைத்தார் எல்லார்*
*முகத்திலும் சந்தோஷந்தான்!*

*வெற்றிலை உரலுக் குள்ளே*
*விரல்நுனி விட்டுத் தோண்டி,*
*'பக்' கென உள்ளங் கையின்*
*பள்ளத்தில் கொட்டி, நீண்ட*
*பொக்கை வாய்க்கு குள்ளே தள்ளிப்*
*புகையிலை திருகிப் போட்டு*
*கக்குவாள் இரத்தம்! வாசக்*
*கயிப்பு மோர் கலாதிதான் போ!*

*அன்னமும் சமைந்தாள் பெட்டை*
*அவன் செல்லன் விடவா செய்வான்*
*முன்னரே சாணைக் கூறை*
*முடிந்தவன்; சொந்த மச்சான்*
*கண்ணமுத் துடையான் பெற்ற*
*கணபதிப் பிள்ளைக் கும், ஓர்*
*எண்ணமாம்! அதற்கும் அன்னம்*
*இணங்கவா செய்வாள்? சீச்சீ!*

செல்லனுக் கென்ன, நல்ல
செஞ்செழிப் பான தோற்றம்
பல் லெல்லாம் முருங்கை மொட்டு,
பரு விழி; காதில் வெள்ளைக்
கல்வைத்த கடுக்கன்; மூக்கு
வீச்சுவாள் சார்த்தினாற் போல்!
கல்லைப்போல் உடம்பு, உள்ளங்
கையிரண் டகலம் நெற்றி.

வைக்கலில் விளைந்த நெல்லை
வைக்கலில் வைத்துக் கட்டி
இக்குலம் தழைக்க வைத்தல்
எல்லோர்க்கும் கடமை; அந்தக்
கைக்குநான் இணங்கேன்! என்னைக்
கண்ணமுத் துடையான் கொண்டு
செக்கிலிட் டாட்டி னாலும்
சீ! இது நடக்கா துண்மை!

வண்டிகள் துறையூருக்கு
வந்தன போலும்; சத்தம்
உண்டாயிற் றாமாம்; கந்தப்
போடிக்கு விளைச்ச லென்ன
கண்டதோ? செல்லன் அந்தக்
கரத்தையில் வருகின்றானோ?
என்றெலாம் தனக்குட் பேசி
இருந்தாள் அன் னத்தின் பெத்தா.

## பொன்னம்மா எழுந்தாள்

வண்டியுள் வருதற் காக
வாசலின் உழலைக் கம்பை
முண்டியும் இழுத்து விட்டு
முற்றத்தைக் கூட்டி, வந்து
மண்டபத் துள்ளே நெல்லைச்
சொரிவதற் கொழுங்கு பண்ணிக்
குண்டானை அடுப்பி லேற்றிக்
கொதிக்க நீர் போட்டாள் பொன்னு!

களத்திலே யிருந்து செல்லன்
களைத்துப் போய் வருவான், ஏனோ
இளைத்துப்போ கின்றான் என்றன்
இளந்தாரிப் பிள்ளை: பாவம்
கொழுக்கட்டை போல நன்கு
கொழு கொளென் றிருந்தான்; இன்று
குழந்தை போல் ஏதோ குந்தி
குருவி போல் கொறிப்பான் சோற்றை!

பொன்னம்மா நினைக்க கந்தப்
போடிக்குப் புரைக் கேறிற்று!
இந்நேரம் நெல்லை, வீட்டில்
இறக்கியும் இருப்பான் சாமி
இன்னுமோர் ஏற்றுத் தானே
இரவைக்கு நாமும் ஊரில்.
கண்களைக் கசக்கிக் கந்தப்
போடியார் கிழக்கே பார்த்தார்.

## பொழுது காலித்தது

ஆழிப்பெண் கரு மாரிக்கு
அருகிருந் தலுவல் பார்த்த
ஏழைப் பெண் ணிருட்டு, பிள்ளை
இரவியைக் கழுவி, வானத்
தூளியில் வளர்த்தி, ஊத்தைத்
துணியோடும் துறையை நோக்கி
நாழியாய் விட்ட தென்றே
நடந்தனள் விடிய லாச்சு?

## அணையூர் அடைந்தனர்

வண்டிகள் அணையூருக்கு
வந்தன; அம்மன் கோவில்
சந்தியால் கிறுகி ஊரின்
சாலையில் நடந்து மாறிப்
பந்தியிற் பிரிந்து தத்தம்
படலையில் நுழைய, ஊரார்
வந்தன வண்டி முன்னால்
வரும்பின்னால் வருஷம் என்பார்.

கடப்படி மாவின் கீழே
கரத்தைகள் நிறுத்தி சாமி
இடுப்பினை நிமிர்த்திக் கொண்டே
இறங்கினான்; முட்டுக் கம்பைக்
கொடுத்ததும் மாட விழ்த்துக்
கொண்டுபோய் மரத்திற் கட்ட
சுடு தண்ணீர் அம்மா என்றான்
சோர்ந்து போ யிருந்த செல்லன்.

கேட்டியைக் கீழே போட்டுக்
கிணற்றில்வாய் கழுவ ஓமம்
போட்டிடித் தெடுத்த கோப்பி
பொன்னம்மா தந்தாள்; வாங்கிப்
போட்டபின், 'வயலுக்குள்ளே
போடியார், பொலியும் உண்டோர்
பாட்டம் கண் தூங்கி விட்டு
பகற்சோறு கொண்டு வண்டி

போடுவேன்' என்று சாமி
பொலியினை மண்டபத் துள்
சூடுபோல் சொரிந்தான்; கூடச்
சுமக்குமோர் வண்டிக்காரன்,
'வீடு கொள்ளாது, நெல்லை
வெளியிலும் அட்டுவத்தில்
போடத்தான் வேண்டும்' என்று
பொன்னம்மா கேட்கச் சொன்னான்

சுரை புன்னைப் பூவைப் போல
சுடச் சுடப் பிட்டும், காய்ந்த
மரையிறைச் சியிலே செல்லன்
மனதுக்குப் பிடித்த மாகக்
குறைவாக மிளகாய் சேர்த்த
குழம்பும், நீர் வடித்த கட்டித்
தயிரும் பால் பழமு மெல்லாம்
தயார் செய்து வைத்து வந்து

'எல்லோரும் சாப்பிடுங்கள்'
என்று பொன் னம்மா சொல்ல,
இல்லைநாம் போகின்றோ மென்
றெழுந்தனர் வண்டிக்காரர்
செல்லன் போய்க் குளித்து வந்து
திருநீறு பூசிப் பிட்டுக்
கல்லையிலிருந்து கொண்டு
கறியினைத் திறந்து பார்த்தான்.

அன்னம்மா சமைந்த சேதி
அப்பன் சொன் னாராதம்பி?
பொன்னம்மா கேட்டுக் கொண்டே
புழங்கினாள்; உண்ட செல்லன்
என்னம்மா இதையெல்லாம் போய்
என்னிடம்! தெரியா தங்கே
என்னவோ நமக்குச் சொல்ல
இல்லையாம்! ஏசிக் கொண்டார்.

என்றனன்; கனகம் வந்து
என்னிடம் நேரில் சொன்னாள்
இன்னமும் தெரியா தாமா?
இவர் போன பின்னால் வந்து
சொன்னதை, இளையான் கொண்டு
சொல்லவும் இலையா? அப்பன்
என்னதான் சொன்னார்? நாளைக்
கிவ்விடம் வருவார் தானே..........?

அம்மை சொன் னவற்றைக் கேட்டு
ஆனந்தப்பட்ட செல்லன்
கும்மினான் மேலும் மூன்று
குழற் பிட்டை! கல்லை விட்டுச்
செம்பினைத் தூக்கிப் போய், வாய்
தீட்டியும் அலம்பி வந்து,
இம்முறை விளைச்சல் மொத்தம்
'எண்பத்தைந் தவணம்' என்றான்.

பிடி மச்சி நாயை, என்னைப்
பிடுங்கத்தான் பார்க்கு தென்றாள்
கடப்புக்குள் செல்லன் மாமி
கனகம்மா; ஓடிச் சென்று
அடிமச்சி நீயா? என்று
அமர்க்களப் பட்டாள் பொன்னு.
'கொடுவாய் மீன் பங்கு போட்டார்
கொண்டு வந்துள்ளேன்' என்றாள்.

மாமியைக் கண்டு, செல்லன்
மறைந்தான் உள் வீட்டுக்குள்ளே,
சாமியும் திரும்பி வந்தான்
தவறணைப் பக்கத் தாலே!
பூமியில் குந்தி, அங்கே
போடியார் களத்தில் ......... இந்தச்
சாமியைத் தெரியுமா? ....... நான்
சண்டியன்! வண்டிக்காரன்!

படையாண்ட குடியான் நான்! நீ
பணிக் கொணாக் குடியாள் மச்சி!
உடையாண்ட மகனா, நானா
உயர்ந்தவன்? சிப்பி சுட்ட
கடையர்கள் அவர்கள் செத்தல்
காலிங்கா குடியான்! ஏதோ
மடையனா நாங்க ளெல்லாம்
மண்டையை உடைப்பேன் நாய்கள்;

முட்டைபோல் விழிகள், கண்மேல்
மூடிக்குள் கிறுகி நிற்க
ஒட்டிய நாக்கை நீட்டி
உதட்டினைத் தடவி, நாயை
எட்டியும் உதைத்துக் கையைப்
பூமியில் அறைந்த சாமி
'கட்டாயம் செல்லன், அன்னம்
கலியாணம் நடக்கும்' என்றான்

கனகத்தைப் பார்த்துப் பல்லைக்
கடித்தபின், வெளியே சென்று
தனகினான் தெருவிற் போன
தட்டாரக் கொட்டா னோடும்!
'சனியன் போய்த் தொலைவாய்' என்று
சபித்த பின் பொன்னம்மா, 'நீ
இனி இரு மச்சி' யென்றாள்,
இருந்தனள் கனகம்மா போய்.

செல்லனும் எட்டிப் பார்த்துச்
சிரிப்பினை அடக்கிக் கொண்டான்
மெல்லவாய் கனகும் பொன்னும்
மிழற்றுகின் றார்கள் கூடி!
நல்லது; கொடுவாய் மீனாம்!
நமக்கின்று வேட்டை, சோற்றுக்
கல்லையை நினைத்துக் கொண்டே
கட்டிலிற் சரிந்தான் செல்லன்.

## மதியமானது

மாமி போனதுவும், நேரம்
மதிய மா னதுவும், மீண்டும்
சாமி சோற் றோடு வண்டி
சாய்த்துப் போனதுவு மெல்லாம்
தானொன்றும் அறியான் செல்லன்,
தாயினைப் பார்த்துக் கொண்டே
ஏனம்மா, கறிகள் இன்று
எல்லாமே எழுப்பம்! என்றான்.

உப்பில்லைப் புளியுமில்லை;
உறைப்பெல்லாம்; உலுவா நாற்றம்!
இப்படித்தானே செல்லன்
இயம்பு வான் முன்ன ரெல்லாம்
எப்படிச் சொன்னான்? மாமி
இங்கு மீன் கொண்டு வந்தாள்,
அப்படிச் சுண்டு! என்று
அவளுக்குட் சிரித்தாள் பொன்னு,

அந்தியாயிற்று; வண்ணான்
அலசிய சாய வேட்டி
முன்மடி விட்டுக் கட்டி
நார்மடிச் சால்வை போர்த்து
'வந்திடுகின்றேன் எங்கள்
வடிவேலைப் பார்த்து விட்டு'
என்றுதன் தாய்க்குக் கூறி
ஏகினான் வெளியே செல்லன்.

சந்தியில் வம்மியின் கீழ்
சப்பாணி கொட்டிக் கொண்டும்
குந்தியும் தாயமாடும்
குமரர்கள், செல்லா! நீயும்
வந்தாயா! வாவா! என்றார்
'வடிவேலைப் பார்த்து விட்டு
வந்திடு கின்றேன்' என்று
வழியோடும் போனான் செல்லன்.

வடிவேலைப் பார்க்கும் சாட்டில்
மச்சாளைப் பார்க்கப் போகும்
பொடியனைக் கூப்பிடாதே
போடொரு சோணால் வீணால்!
தடியனாம் தருமன் கூறித்
தாயத்தை உருட்ட ஆங்கே
கடையடி யிருந்து தோழர்
கண்களைச் சிமிட்டிக் கொண்டார்!

கண்ணமுத் துடையார் செல்வன்
கணபதிப்பிள்ளை மட்டும்
எண்ணம் வே றுடையானாக
இருப்பதைப் பார்த்து விட்டு
என்னடா தோழே? என்றான்
இளையான், நான் தோற்றேன்; ஆட்டம்
இன்றைக்குப் போது மென்று
கணபதி எழுந்து போனான்.

உழையாமல் உண்டு, வெள்ளை
உடுத் துலாத் துடையான் பிள்ளை
களையாமல் களைத்தான்! என்ன
காரணம்? என்ற பல்லன்
இளையானைப் பார்த்து, தம்பீ!
எனக்கது தெரியு மென்று
விளையாடிக் கொண்டே, வீமன்
விநயமாய்ச் சிரித்துச் சொன்னான்.

செல்லையா என்றாற் சிம்ம
சொப்பனம் கணபதிக்கு
பொல்லாத போட்டி, அந்தப்
பொடிச்சி அன்னம்மா வாலே!
செல்லனை விட்டு வேறு
செய்வாரா அழகிப் போடி
நல்லொரு ஞாயம்! கம்பை
நகர்த்தினான் துடியன் வீமன்.

## வடிவேலின் வீட்டில்

வாசல் மா துளையின் கீழே
வடிவேல் தன் மனைவி யோடு
பேசிக் கொண்டிருந்தான்; யாரோ
பெரிதாகச் செருமக் கேட்டு,
வாசெல்லா! வயலிருந்து
வந்த தெப் போதோ? என்று
ஆசையாய் வரவேற்றுப் பாய்
அளித்தனன் திண்ணைக் குள்ளே.

திண்ணையி லமர்ந்து பேசித்
தீர்த்தனர்; அவர்களுக்கு
கண்ணகை சுவைநீர் தந்தாள்.
கதையிலும் கலந்து கொண்டு
அன்னத்தைப் பற்றி ஏதோ
அடித்தொண்டைக் குள்ளே சொன்னாள்.
என்னவோ நடக்கட்டும் நான்
எழுகிறேன் என்றான் செல்லன்

கொத்தாகப் பூனை மேகம்
குவிந்ததால் அழகு கெட்டு
சித்திரம் சிதைந்தாற் போல
சிறுநிலா, அடியே அன்னம்
புத்திதான் அறிந்து விட்டாய்!
போக்கிரி! வடிவேல் வீட்டில்
சத்தத்தை மதித்தும் போலிச்
சாமிபோல் இருந்தாய் உள்ளே.

வடிவேலின் சாட்டில் அன்னம்
வடிவினை மறைந்து காண
முடியாது போன தெண்ணி
முணு முணுக் கின்ற செல்லன்
அடிமனம் போலக் கூத்து
மத்தளம் அலறக் கோயி
லடியிலே சிறிது குந்திக்
கூத்துப் பார்த்திருந்தான் செல்லன்!

❁ ❁ ❁ ❁

# கதிர்

## ஊருக்குச் சொன்னார்

'பங்குனிக்குப் பதினேழு
புதன்கிழமை பகல்நேரம் பரணி சேர்ந்த
மங்கலசீர் முகூர்த்தத்தில்
மகள்அன்னம் சமைந்ததண்ணீர் வார்ப்ப தாக
எங்களது பெரியார்செய் தீர்மானம்'
என்றூரின் எல்லா வீடும்
சங்கைசெய்து கனகம்மா வெளியிட்ட
தாம்பூல வட்டா தந்தாள்!

'ஊராரோ ஒருநாள்முன் வந்து விட்டார்?
என்றால், உள் உரித்துக் காரர்
ஆறேழு நாட்களுக்கும்முன் வந்தார்.
அலுவலுக்கு! அன்னம் மாவோ,
பேரான குடும்பத்தின் கடைக்கொழுந்து;
சமைந்த தண்ணீர்ச் செலவை எண்ணி
ஆராருக் கோவெல்லாம் ஆனந்தம்!
பொன்னுவுக்கு அதற்கும் மேலே!

இருகரையும் நெல்குவித்து
நிறைமுட்டி கூரைமுடி விளக்கும் வைத்து
கிரிகை; மஞ்சுவீட்டுக்கு
முன் வாசல் பந்தலிலே தொடங்கும். பெண்கள்
குரவையிடப் பீரங்கிவெடி முழங்க
அன்னத்தின் மச்சிமார் போய்
அருகிருந்து மஞ்சளிலே அள்ளி
அவள் முகமெல்லாம் அப்புகின்றார்!

பாலறுகு மஞ்சளோடு
வேளாண்மை வேர் அரைத்துப் பாலில் கூட்டி
வாலை அன்னம் சிரசினிலே
வாழ்வாட்டி மார்அரப்பு வைத்து, வெள்ளைச்
சேலை புதிதாயுடுத்தி
வெள்ளைமேற்கட்டி எழக் குரவையிட்டு
தாலியொடும் விளங்குகிற தாய்மார்கள்
குடம் கொண்டு தண்ணீர் மொண்டார்!

மச்சிமுறைக் காரரெல்லாம்
மஞ்சளிலே கண்ணாம்பும் கலந்து கொண்டு
கச்சைகட்டக் கண்டு, மனம்
கலங்குகிறார் மச்சான் மார்! காரைதீவுப்
பிச்சையண்ணர் இறுக்கிவைத்த
பீரங்கி வெடிகாதைப் பிளந்து தள்ள
எச்சிலின்றித் தண்ணீரும் எடுத்துவந்தார்.
கிணற்றடியில் எங்கும் பெண்கள்!

## தண்ணீர் வார்த்தார்

அரிசியொடும் மரக்கறிகள்
தயிர்ப்பானை பணியாரப் பெட்டிகொண்டு
குரவை, வெடி கொளுத்தி, கால்
கொலுசு தண்டை குலுங்கிடவும் கூட்டம் கூடி
வரிசைதர வந்தது ஊர்!
வாசலிலே பந்தலெலாம் வழிந்து நிற்க
சொரிகின்றார் அன்னம்மா தலையினிலே
மூன்றுகுடம் சமைந்த தண்ணீர்!

ஊராரும் உடையாரின் மனையவளும்,
உற்றாரும், ஒன்று கூடி;
சீரோடும் தம்செல்வப் பெருமையினை
வெளிக்காட்டும் செருக்கி னோடும்
ஊருக்குள் இதுவரையில்
யாருக்கும் திறவாத உரிமையோடும்
பேராக அன்னம்மா
சமைந்ததண்ணீர்ச் செலவுக்கு வருகை தந்தார்.

பந்தலின் கீழ் மிதிபலகைபரப்பி, அதில்
பாவாடை விரித்து, செய்ய
சந்தனத்தைக் கடைந்து சிற்பி
சமைந்தெடுத்த மாரியம்மன் சிலைபோல் அன்னம்
வந்து நின்றாள்! அவள் மீது
வைத்தவிழி வாங்காது செல்லன் நின்றான்
ஐந்தாறு பெண்பிளைகள்
அன்னத்தைத் திரைகட்டி மறைத்துநின்றார்.

## ஆலாத்தி

குன்றிமணி குயிற்றிஎழிற்
கோலமுற அமைத்தெடுத்த சோற்றாலாத்தி
குன்றிமணி பதித்தெடுத்த
மாவுருண்டை ஆலாத்தி; கொழுந்து விட்டு
நின்றெரியும் திரியேந்தி,
மஞ்சணநீர் ஆலாத்தி என்றன்னத்தை
ஒன்றன்பின் ஒன்றாக
ஒழுங்காக ஆலாத்தி எடுத்து நின்றார்!

## வண்ணான் கடன் தந்தார்

*வண்ணானின் கடன்கழிக்க*
*வடிவாக முட்டுவைத்த சோற்றுப் பெட்டி*
*வண்டுகட்டி அவித்தெடுத்த*
*பிட்டோடு களியுருண்டை வாங்கிவாங்கி*
*அன்னத்தின் தலைசுற்றிக்*
*கம்மாஞ்சி கையினிலே அளித்த பின்னர்.*
*கண்ணூற்றுக் காலாத்தி*
*காட்டியபின் அறைக்குள்ளே கடத்திப் போனார்.*

## மஞ்சள் குளித்தார்!

*செம்புவந்து பந்தலுக்குள்*
*சேருமுன்னே பலமாகச் செருமிக்கொண்டு*
*'வம்பு வந்த தென்' றெழுந்து*
*வாய்க்குளெதோ முணுமுணுத்தார் கந்தப் போடி;*
*நம்புமச்சான் மஞ்சளில்லை*
*சோறுண்ண எழுமென்றார் அழகிப் போடி;*
*கொம்பலொன்று தொடங்கிற்று*
*பெண்களுக்குள் எல்லோரும் குவிந்தார் ஓடி.*

*கனகம்மா மேனியெலாம் மஞ்சள்*
*ஒருகையினிலே சட்டியோடு*
*இனியென்ன செய்வாயோ?*
*என்றுசொல்லி இளிக்கின்றாள் உடையார் பெண்டில்;*
*மனதுக்குள், 'இவளென்ன*
*மச்சிமுறை கொண்டாட மஞ்சள் ஊற்றித்*
*தனகவந்தாள் போலும்?' எனப்*
*பொன்னம்மா முகமோடிக் கறுக்க லாச்சு.*

பொன்னம்மா முகம்போன போக்கறிந்து
கனகம்மா, 'பொறுதி மச்சி'
என்னுதற்குள் மஞ்சள் மழை
எங்கிருந்து பொழிந்ததுவோ? உடையாரம்மாள்
கண்மூக்கு முகமெல்லாம்
கண்டபடி வார்த்துவிட்டாள் கனகின் தங்கை
என்னேடி துணிச்சல்? என
இரண்டொருவர் கண்ணகையை எரிக்கப் பார்த்தார்!

கண்ணகைக்கும் மஞ்சளிலே
அபிஷேகம் செய்தாள் ஓர் கறுப்பு மாமி
என்னடியேய்! அபிராமி
என்றொருத்தி செம்போடு இடையில் பாய்ந்தாள்!
பொன்னுவெங்கே? என்றொருத்தி
புழக்கடையில் தேடுகிறாள். ஒளித்து நின்ற
அன்னத்தின் மூத்த அண்ணன்
ஆறுமுகம் ஒருத்தியிடம் அவ திப்பட்டான்!

## செல்லனும் பட்டான்

பந்தலுக்குள் மூலையிற்போய்ப்
பதுங்கிக் கொண் டிருக்கின்ற செல்லையா 'நாம்
எந்தவிதம் இங்கிருந்து
தப்புவதோ?' என்றெண்ணி ஏங்கும் போது
வந்தாள் பார்வதிப் பெத்தா
மஞ்சளொரு சட்டியிலே வார்த்துக் கொண்டு
தந்திரமாய் அதைத்தடுத்தல்
முடியாது செல்லையா தவித்துப் போனான்!

‘பட்டாரென் குஞ்சுமச்சான் படுவையிலே’
என்று பெத்தா பாட்டுப்பாட
கொட்டாதே என்று சொல்லிக்
கும்பிட்டான் செல்லையா; பெண்கள் கூடிக்
கொட்டுகொட்டு மாப்பிள்ளையைக் குளிப்பாட்டு
என்றார்கள் குறுக்கே பாய்ந்து
தட்டி விட்டான் சட்டியைத்தன்
சால்வையினால் அங்குவந்த சாமித்தம்பி.

வண்ணாரக் கம்மாஞ்சி
வாசலிலே நின்றபடி ‘போடியாரே
என் தலையில் மஞ்சளினை
இப்படியா ஊற்றுவதும்?? என்று கூவ
‘என்னடா கம்மாஞ்சி?’
என்றங்கே போய்ப்பார்த்த அழகிப்போடி
கண்கெடுவான் தலைமுழுக்கக்
கறியென்றார் வெறியிந்தக் கழுதைக் கென்றார்!

தலைச் சோற்றுச் சுமையோடும்
தலைகெட்ட வெறியோடும் தள்ளம்பாறி
நிலைதவறக் குழம்பெல்லாம்
நெற்றியினால் வழிந்தோட நின்ற வண்ணான்
தலைதாழ்த்திக் கும்பிட்டுத்
தவறுக்கு மன்றாட்டம் பண்ணி ‘ஏதும்
இலையாநான் போவதற்கு?
இன்னுமொரு துளியென்றான் ஹீ..... ஹீ.... என்றான்.

கம்மாஞ்சி நின்றநிலை கண்டவர்கள்,
கைதட்டிச் சிரித்துக் கொண்டு
அம்மாடி இவனுக்கோர் அளவில்லை
என்றபடி அலுத்துக் கொண்டார்
'சும்மாபோ; வீட்டுக்குச் சோற்றோடு
போய்ச் சேர்ந்தால் போதும்!' என்று
தம்மாலே ஆனமட்டும் சொன்னார்கள்,
முடியாமல் தந்தார் கொஞ்சம்!

வண்ணவண்ணச் சேலைகட்டி
வந்திருந்த பெண்களெல்லாம் மஞ்சள் ஆடி
வண்ணானின் மாற்றுடுத்து
வந்தமர்ந்தார் பந்தலிலே வரிசையாக
அன்னத்தைக் கேலி பண்ணி
அமுதுண்டு அடைகாயும் அருந்திக்கொண்டு
பின்னேரம் 'கனகம்மா!
பிரியாவிடை தாவென்றார்? பிறத்தியார்கள்.

## வந்தது வசந்தம்

அன்னம் சமைந்த செயல்கண்டு நாணி,
அவளுக்கு நாங்கள் குறைவா
என்னத் தளிர்ந்து ருதுவாகி ரத்தம்
இலையாகி நின்ற இணரின்
கொன்னை பருத்து முலையாய் விளைந்து
குயிலோடு காதல் பழக
எண்ணித் துடிக்கு மிளமா மரங்கள்
இளவேனில் வந்த தினிமேல்

## குயில் தோற்றது

*படியாத மாதர் கவிபாடல் கண்டு*
*பகைகொண்டு வெல்ல நினைவாய்*
*படையோடும் எங்கள் தமிழ் வித்து*
*வான்கள் கவிபாட வந்த அழகில்*
*குடைகின்ற மாவின் குயில் தந்த*
*பாவில் குணமில்லை என்று சிறுவர்*
*உடைவார்கள் கைகள், குயிலோடு கூவி*
*உடைவார்கள் தங்கள் குரலும்!*

## வெறிக்கு விழா

*மறுகாலும் வந்து குயில் தோற்றநாளை*
*வழமைப் படிக்கும் முறையாய்*
*திருநாள் எடுத்து மகிழாமல் யாரும்*
*விடுவார்கள் போலும் அதனால்,*
*மறுவாரம் ஊரில் வருடப் பிறப்பு*
*மனைதோறு மிந்த விழாவைத்*
*திறமா யெடுக்கும் வினையால் நிறைந்த*
*அணையூரில் எங்கும் அமளி!*

*பூம்பந்தல் வாகை புளிவம்மி போடும்*
*புதுவேலி எங்கும் எழவும்*
*மாம்பூ பரந்த மனைவாசல் கூட்டி*
*மழையாய்த் துமித்த கமுகின்*
*பூம்பாளை வாரி புதிதாய் உதிர்ந்த*
*சருகோடு புற்கள் மறையைச்*
*சாம்பல் ஒழிந்து வளவெங்கும் வெள்ளை*
*மணல் தூவுவார்கள் மகளிர்!*

விறகோசை, தெங்கு குலையாய் உதிர்ந்து
விழுமோசை மாவின் நிழலில்
உரலோசை, செம்பு சருவம் பொருட்கள்
உருளோசை ஊரில் அயலார்
சிறுதானியங்கள் விலைகூறுமோசை
விடியும் வரைக்கும் இரவில்
இரைகின்ற எண்ணெய்ப் பணியார ஓசை
இவையோடு கூட எழுமே!

குடியாய் வளர்ந்த புளிஆல் நீர் வம்மி
நிழல் தேங்கு கோயில் வெளியில்
பொடியன்கள் கிட்டி அடியோடு வட்டக்
கவடி பிடிக்கு மொலியில்,
குடிகாரர் கூட மிரள்வார்கள் கோயில்
இடியாமல் நிற்றல் அருமை
வடிவான வேட்டி, பலகாரம், ஊஞ்சல்,
இவைபற்றி நூறு கதைகள்.

## தவறணையடியில் தகராறு

போடொரு முட்டி நல்ல
புளிப்பிலே என்றான் சாமி
தாடியைத் தடவி நின்ற
தம்பானைப் பார்த்து, தம்பீ
ஆடொன்று கட்டியுள்ளேன்
ஆரார்க்குப் பங்கு தேவை?
வேடிக்கை இல்லை என்றான்
வெடிக்கும் போய்ப் பார்ப்போம் என்றான்.

தலையினை எனக்கு என்ற
தம்பானை நோக்கி, தோழே;
குலையீரல் வேண்டுமானால்
கொண்டுபோ! ஆனால் ஆட்டுத்
தலையிலே வராதே! தங்கம்
தந்தாலும் தாரேன், என்று
விலையென்ன ஆட்டுக் கென்னும்
வேலனைப் பார்த்தான் சாமி.

அரைப் பவுண் ஆளே! .... என்று
கைவிரல் ஐந்தைக் காட்ட.
'குறைத்துக் கேட்டிருக்க லாமே'
குட்டியா கொம்பன் ஆடா?
விறையன் நீ என்றான் வேலன்.
வீட்டுக்கு வந்து பார்த்து
பிறகுசொல் வேலா என்றன்
பேரத்தை என்றான் சாமி

சம்பலைத் தடவி நாக்கின்
சலிப்பினை வழித்துக் கள்ளில்
பம்பலாய் வயிறு முட்டப்
பருகி, ஓர் பூச்சுத் தள்ளி,
கொம்பு மீசைக்குள் சென்று
வடிபட்ட நுரை, தேன், பூச்சி
தும்பையும் விரலால் நீவித்
தொடர்கின்றான் சாமித் தம்பி.

புத்தாண்டு பிறக்குமுன்பே
போக்கிரிப் பயல்கள் கள்ளால்
செத்துப் போவான்கள் போலும்
சிவசிவா என்று வந்த
பெத்தப்பா விதானைப் போடி
பெரிதாகச் செருமக் கேட்டுக்
குத்துப்பட்டவர்கள் கூட்டம்
குருவிபோல் கலைந்து போனார்.

## தேருக்கு ஆயத்தம்

உடையாரின் தெருவார் இந்த ஊரிலே யாரும் முன்னர்
படையாத வண்ணமாகப் பண்ணுகின் றாராம் ஓர்தேர்.
கடைகெட்ட தெருவார் கூத்துக் காட்டினாற் கண்ணைமுடிப்
படையாண்ட குடியான் நானும் படுக்கவோ? பார்ப்போம் ஓர்கை!

உடனடியாக நாமும் ஒருபெரும் தேர்செய்வோம் போய்.
விடமுடியாது மச்சான் வெளிக்கிடு வேலா தம்பான்
வடமொன்றும் தேவையில்லை. வண்டியில் தேரைக்கட்டி
உடையாரின் தெருவரைக்கும் ஓட்டிப்போய்த் திரும்பாவிட்டால்.

வன்னிய தெருவார் நாங்கள், வாழ்ந்துதான் மானம் என்ன?
'உன்னெண்ணமென்ன' என்று உசுப்பினான் சாமி; வேலன்
பின்னென்ன பின்னே என்றன் பெத்தப்பா காளிக்குட்டி
முன்னொருமுறை நம்மூரில் மூண்டதோர் வாரம் சொன்னார்.

ஊரெல்லாம் திரண்டதாம். நம் உடையாரின் தெருவார் செய்த
தேரினைக்காண; என்று தெரிந்ததும் பெத்தப்பா போய்
மாரியம் மாளின் கோயில் முடக்கிலே உடையில்லாமல்
தேரினைப் பாருமென்றே தெய்தெய்என் றாடக்கண்டு

தேரோடும் போன ஊரார் திரும்பியே ஓடினாராம்.
சூரர்கள் அவர்கள்! என்று தொடையிலே தட்டிக் கொண்டான்!
ஓரக்கண் ணாலே கள்ளை ஒருமுறை பார்த்த தம்பான்
நேரமானாலும் நல்ல நிலவுதான் செய்வோம். என்றான்.

மண்டியை வடித்து ஊற்றி மடக்கென்று குடித்து முட்டி
கொண்டுபோ வேலாமுன்று கொண்டுவா என்றான் சாமி.
சந்தைக்குப் போனாயாமே? சகலதும் வாங்கிக் கொண்டு
வந்தாயா? என்றான் தம்பான். வாங்கினேன் வழக்கம் போல

போடியார் போனார்! கூடப் போய்வந்தேன் வண்டிகொண்டு;
வீடுகொள்ளாத மட்டும் வேண்டினார் புடவைசீலை.
பாடுபட்டவனாம் நான். யாழ்ப்பாணச் சாயவேட்டி
போடெங்கள் சாமிக்கென்று பொடிச்சிக்கும் வாங்கித் தந்தார்;

தலைக்காயாய் வழுதுலங்காய், தக்காளி, வெண்டைக்காயும்,
பலாக்காயும், வாழைக்காயும், பாகற்காய், அவரைக் காயும்,
உலக்கைபோல் புடலங்காயும், ஊர்ப்பட்ட சுரைக்காய் மற்றும்
எலுமிச்சை, கருவேப்போடு எல்லாமே வாங்கினார். சா....,

முன்னங்கைப் பருப்பம் தோழே மாப்பிள்ளைக் கீரிச்சூடை,
இன்னேரம் பொரியலாகி இருக்கும்; அத்தோடு சீனி,
சுன்னாகம் சுருட்டு, வெள்ளைச் சாராயப் போத்தல் ஆறு,
என்னென்ன இழவோ எல்லாம் ஏற்றினார் வாங்கி வாங்கி;

தேருக்கும் பொருட்கள் உண்டு. 'தெருவுக்கு மானம் காக்கும்
போர்' என்றார் கந்தப்போடி, புறப்பட வேண்டும் தோழே;
வார் இதற் குள்ளே யென்று வாங்கினான் நிறைய ஊற்றி
ஊறிய வாயில் நீரை உமிழ்ந்து கள் உறிஞ்சுகின்றான்.

அண்ணாந்து பார்த்தான் சாமி. ஆகாயவெளியை; ஆங்கே
தென்னையின் குருத்தில் தொங்கும் தேன்கூடு போல நின்று
அண்ணாவி யின்றி ஆடும் அழகிய நிலவு கண்டு
இன்னுமேன் சுணக்கமென்று எழுகிறான் சாமித்தம்பி.

போகையில் எதிரே வந்த பொன்னனை மறித்த தம்பான்
சோகையா உமது தேரின் சோடினை முடிந்த தாடா?
வாகைசூடுபவர் இந்த வன்னிய தெருவார்தாம்; எம்
பாதையில் உம்தேர் வந்தாற் பார்க்கிறோம் ஒருகை என்றான்.

என்னாட தம்பான் மெத்த இளக்காரம் பேசுகின்றாய்?
என்னதான் நினைத்துக்கொண்டாய் எங்களின் தெருவை என்றே
கொன்னையன் நல்லதம்பி குறுக்கிலே ஓடி வந்து
பொன்னனுக் கருகில் நின்று போடாநாய்ப் பயலே என்றான்.

நாயென்ற வார்த்தை கேட்டு நாகம்போற்சீறி வேலன்
போயொரு குத்து விட்டான்! பொக்கென்று சாய்ந்தான் நல்லான்;
ஏய்ஓடி வாரீர் இங்கே எங்களின் இடையார் என்று
கூயென்றான் பொன்னன் நின்று; கூடினார் இரண்டுகையும்.

## சுகத்திலே மிதந்தான் செல்லன்

இழந்த தன்னிளமை மண்ணுள் இருக்கலாம் என்றும் தேடி
வளைந்த கூன் உடம்பு, வாழ்வை, வாழ்ந்தொளி குறைந்த கண்கள்
இழைந்த புன் சிரிப்பு, மூப்பின் இனியதோர் சாட்சி! மண்ணை
அளைந்தாங்கு வாசல் மாக்கீழ் அமர்ந்தபார் வதியைக் காண்போம்!

'இழந்ததாய் ஏங்கு கின்றாய் இல்லவே இல்லை' என்றே
வளர்ந்தெழில் குலுங்கும் வாசல் கிணற்றடிக் கதலியாக
இளந்தென்னைக் கீற்றில் பேசும் இணைக்கிளி கண்டு நெஞ்சை
இழந்து நின் றிருந்தாள் அன்னம் எலுமிச்சை ஓரமாக

ஒளிந்து பார்த்திருந்த அன்னம் உள்ளத்தை வசனமாக்கி
எழுந்து பாரடியே; செல்லன் எங்குபோகின்றான் என்று
ஒழுங்கையைப் பார்த்த வாறே; உரைத்த பார்வதியை நோக்கி
தொழும்புனக் கிதுவே! சும்மா தொண தொணக் காதே பெத்தா.

அனுங்கினாள் அன்னம் ஓகோ! அப்படிச் சொன்னோர் உன்போல்
அனந்தம்பேர் அன்னம்! தாலி அவர்கட்டி முடிந்த பின்னால்
சனங்களும் நானும் ஈதைச் சந்தியில் பேசிக் கொள்வோம்!
சினத்தைப்பார் சினத்தை என்று சிணுங்கியும் சிரித்தாள் பெத்தா.

ஈரோடு பேனும் ஏறி இரத்தத்தை உறிஞ்சினாலும்
ஊர்வது பொறுக்கவில்லை ஓடிவா மகளே அன்னம்!
பாரிந்தத் தலையை என்று பார்வதிப் பாட்டி சொல்ல
ஈர்கோலி கொண்டு வார இருந்தனள் அருகே அன்னம்.

வாரினாள் ஈரொன்றேனும் வாராதா? வந்தால் வாயை
ஊறியும் நகத்தில் வைத்து உறிஞ்சியும் குற்ற ஆசை.
தூறியும் பார்த்தாள் சோர்ந்தாள்! சொடுகுதான் தலைமுற்றாக
ஏறிப்போய்க் கிடக்கு பெத்தா! ஈரில்லை என்றாள் அன்னம்

ஆரது கடப்புக்குள்ளே? ஆண்பிள்ளை பார் அன்னம்மா!
பார்வதிப் பாட்டிகூறப் பறந்துபோய் மறைந்தாள் அன்னம்
'பேரன் நான்' என்றான் செல்லன். 'பிள்ளை பாய்' என்று தன் கண்
தூரத்துப் பார்வை தூர்ந்த துயரத்தை அழுதாள் பாட்டி.

பாய்பாதி விரித்துத் தன்னைப் பாதுகாத் தோட்டைக்குள்ளே
பாய்கிற வேங்கைகண்டு பதுங்கும் வேடனைப்போல், மண்ணில்
தோயாத அடியில் பாதசரங் கிடந்தழவும் - பாயை
வீசினாள்; விரைந்தாள், ஓடி வீட்டுக்குள் மறைந்தாள் அன்னம்.

பாண்டிருப்பூரில் தட்டான் பண்ணிய பூணாரங்கள்
வேண்டஉன் மாமன் மாமி வெளிக்கிட்டார் வெள்ளாப் போடு
பாண்டம் பாத்திரமும் வாங்கப் பகலெல்லாம் அலைவார் போலும்
ஆண்டி, நம் வண்டிக்காரன் அவனுந்தான் போனான் காணோம்.

எப்படி வருஷம்? சீலை துணிமணி எடுத்தானா? உன்
அப்பனைப் பார்க்கச் சோட்டை! அவனுக்கென் நினைப்பே இல்லை!
எப்படிக் கிடக்கிறேனென்று எட்டியும் பார்க்க மாட்டான்!
அப்படி என்னவேலை அவனுக்கென் றலுத்தாள் பாட்டி.

எல்லார்க்கும் எடுத்தாயிற்று. இதோ உனக்கெடுத்த சேலை
நல்லதா? பார்பின்னாலே, நானூறு குறை சொல்வாயாம்!
செல்லன் சொன்னவற்றைக் கேட்டுச் சிரித்தனள் பாட்டி; உள்ளே
செல்லமாய்.. பெத்தா என்றே அழைத்தனள் அன்னம் கேட்டு

என்னடா... எனக்கேன் சேலை எடுத்தாய்? உன் பெண்டில் எங்கள்
அன்னத்துக் கெங்கே? பின்னால் அவள்எனைக் கொளுவ வந்தால்
என்னத்தைச் சொல்லித்தப்ப இயலும் நான், என்று பாட்டி
சொன்னதில் இருந்த, அந்தச் சுகத்திலே மிதந்தான் செல்லன்

மண்டபத்துள்ளே வாடாமகனே என்றழைத்துச் சென்று
கொண்டுபோய் வைத்தாள் பிட்டுக்கொழுக்கட்டை பணியாரங்கள்
கண்டதும் திகைத்தான் செல்லன். காரியம் இல்லைக்கொஞ்சம்
தின்றுபார் என்று தண்ணீர்ச் செம்பையும் கொணர்ந்து வைத்தாள்.

என்னம்மா இளைக்கின்றாய்நீ எனக்காக ஏனித்தொல்லை?
என்கிற செல்லன் முன்னால் இருந்த பார்வதியும் பின்னே
எண்பதும் முடிந்தாயிற்று. இனியென்ன? எல்லாம் கண்டேன்!
இன்னும் நான் இருப்பதெல்லாம் எத்தனை நாளோ? என்றாள்.

அன்னத்தின் அருகே நீயும் அவள் மடிதனிலோர் பிஞ்சும்
என்னிரு கண்கள் கண்டால். எனக்கொருகுறை வேறுண்டோ?
மண்ணுக்குள் மகிழ்ச்சியோடென் மணவாளர் போன ஊர்க்கே
கண்களை மூடிக்கொண்டூர்க் கால்களில் நடந்து போவேன்.

இன்பமும் அதற்கூடாக இழைத்திடும் துயரும் – செல்லன்
அன்பினை உருக்க, அம்மா அதையெல்லாம் பேசி வீணாய்
துன்பத்தை விலைக்கு வாங்கத் தொடங்கினை, இனும் நூற்றாண்டு
மங்கலம் பொங்க வாழ்வாய்! வரட்டுமா? என்றான் செல்லன்.

மேட்டுவட்டைக்குள் பூமி விதைக்கிறார் வரம்பு வைக்க
ஆட்களும் இல்லை. அந்த அலுவலில் ஓடி அப்பன்
வீட்டிலும் சுணக்கமில்லை! வெள்ளாப்பில் எழுந்து போனால்
ராத்திரி நடுச்சாமத்தில் சோர்ந்துபோய் வந்து சேர்வார்!

போய்வருகின்றேன் என்று புறப்பட்டான் செல்லன், வீட்டு
வாயிலில் வண்டி கண்டு வாழையில் மறைந்து, மாமி
போயபின் ஒழுங்கை புக்கான். போம்வழி யெங்கும் பொங்கும்
தூய வெண்நிலவு வையத் துரைத்தனம் செய்தல் கண்டான்!

பூமணக்கின்ற மாலை புதுப்புதுக் கனவு கோக்க
மாமரக் குயிலிராவின் குறியிடை மகிழ்ந்து பாட
ஆமைகள் முதுகில், வைரம் அம்புலி அணிதல் கண்டே
ஊமையாய் நடந்தான் செல்லன் ஊரெங்கும் வெடியின் ஓசை.

அன்னத்தின் நினைவு நெஞ்சில், அலர்ந்தது செல்லையாவின்
பின்னாலே அவள்தன் கூடப் பிரயாணம் பண்ணல் போன்றோர்
எண்ணந்தோன்றிடவும் வெட்கி இதுவென்ன எண்ண மென்று
பின்னாலே திரும்பிப் பார்க்கப் பிரமையே சிரிக்கும் நின்று.

முன்னூற்று அறுபத்துமூன்று; முழுநாட்கள் பொறுத்துவிட்டு
இன்னுமோர் இரவு மட்டும் இருந்திட மாட்டாராகிச்
சின்னப்பையன்கள் சுட்ட சீனாவின் வெடிகள் போன்று
என்னென்ன நினைவோ வெல்லாம் எழுந்தன செல்லன் நெஞ்சில்

ஆரடி வெடியை உன்றன் அருகிலே போட்டான்? என்று
பார்வதிப் பாட்டி கேட்கப் பயந்துபோய் நின்ற அன்னம்
கூராக என்னை நோக்கி, குற்றத்தை யாரோ எங்கள்
ஊரிலே ஒருவன் பேரில் உரைத்ததும், உயிரைக் கொண்டு

தப்பினேன் பிழைத்தேன் அன்னம் தங்கந்தான் வீட்டில் எங்கள்
அப்பன் காதினிலே கேட்டால் அடிஉதை கிடைக்கும். ஆமாம்
எப்படி இதெல்லாம் நெஞ்சில் இருக்கும்? ஓர்வருஷ நாளில்
அப்படி நடந்த தென்று அதிசயப்பட்டான் செல்லன்.

## பொழுது புலர்ந்தது

வெடியோசை கேட்டு, 'தூங்க விடாரிந்த வருஷக் காரப்
பொடியன்கள்? என்று சேவல் புறுபுறுத் தெழுந்து கூவ
அடிவானக் கடலில், தங்க அத்தாங்கால் விண்மீன் எல்லாம்
வடித்தாக்கக் கொடுத்தான்; தேய்ந்து வந்தான் செம்படவன்பானு

## வருஷம் பிறந்தது

'இப்பொழுதேனும் எம்மேல் இரக்கம் வந்ததுவே' என்று
செப்புவார் சிறுவர்; கேட்டுச் சிரித்தனர் கமலமாதர்.
'எப்படி வருஷம்?' என்ற இரவியின் கிண்டல் கேட்டுத்
துப்பட்டி எடுத்துவீசித் துள்ளினார் கிழவரெல்லாம்!

விட்டுவிட் டொலித்து நின்ற வெடியோசை தொடராய் நீண்டு
பட்டுப் பட்டென்றே காதைப் பாடாகப் படுத்தித்தள்ள
தட்டுக்கெட் டெழுந்து தங்கள் கனவினைப் பாதியோடு
விட்டதை நினைந்து, மூச்சு விட்டார்கள் குமரிப் பெண்கள்.

## அன்னம் அரப்பு வைத்தாள்

'இன்னுமா தூக்கம்? அன்னம் எழுந்திரு குளிக்க' என்ற
அன்னையின் ஆணை கேட்டு, அடிபட்ட கன்றே போல
அன்னமும் எழுந்தாள். கோயில் அரப்பொரு செம்பில் கொண்டு
முன்னாலே கனகம் போனாள். முறைப்படி நிற்கச்செய்தாள்.

ஆல்இலை காலுக்கிட்டு, அரசிலை தலையில் தொட்டு
'பால்பொங்கி, குடும்பம் நல்ல பண்ணையாய்ப்பெருக' ஈசன்
கால்பற்றி இறைஞ்சி, அன்னம், தலையிலே அரப்பு வைத்தாள்.
வேல் சிக்கும் விழிக்குள், சிக்கி விழுந்ததோர் அரப்பின் துள்ளி!

கண்களைக் கசக்கும் அன்னம், கையினைப் பற்றிச் சென்று
இன்னும் நீ குழந்தை யாட்டம் இருக்கிறாய் கிணற்றில் ஈயத்
தண்ணீரை அள்ளி அன்னம் தலையிலே சொரியும் போது
'அண்ணே'யென் றுள்ளே வந்த ஆளினைக் கண்டாள் அன்னை!

சின்னானா வாடா இந்தச் சித்திரை வருஷத்துக்கு
என்னப்பா சுமந்து வந்தாய் என்றனள் கனகம் செல்லன்
சொன்னதைச் சொல்லி, தந்த சுமையையும் கொடுத்தான் சின்னான்
என்னது இறைச்சி போலும் என்றனர் அழகிப் போடி.

அரப்பிட்டு முழுகி உள்வீட் டறையிலே விளக்கினோடு
நிறைமுட்டி வைத்தார் மாதர் நீறிட்ட நெற்றி வேர்க்கச்
சருவத்தில் பால் பிழிந்தார் சண்டியரான ஆண்கள்
பரிதிக்குப் படைத்தார் பொங்கல் பாடினார் தெய்வப்பாடல்!

தங்களுக் கென்றுவாங்கித் தந்த தம் உடுப்பை ஊரில்
எங்கினும் சென்று காட்ட, ஏக்கத்தில் தூங்கா தையோ
எங்கடா விடியும்?' என்றே இருந்தவர் தாயார் தந்த
பொங்கலா உண்பார்! இந்தப் பொடியன்கள் பொடிச்சிமார்கள்

பிட்டோடு தயிரும் சேர்த்துப் பிசைந்து சக்கரைதேன் கொட்டி
விட்டார்கள் வட்டிலோடு வெளிக்கிட்டார். அம்மை கையால்
முட்டாசி வாங்கக், கையில் முழுத்தமும் வாங்கி ஓலைக்
குட்டானில் வைத்து வண்ணக் குருவிகள் பறந்து போகும்.

வீதியின் மருங்கு நீண்ட விருட்சங்கள் தோறும், ஊஞ்சல்
வாதினில் பறக்கும், பாடல் வகைவகை யாக நூறு
காதினில் கலந்து 'கன்னித் தமிழென்றும் வாழும்' என்ற
நீதியை நிலைநாட்டும் நம் நெஞ்செலாம் சுவையே ஈட்டும்

வண்ணாத்திப் பூச்சிக் கூட்டம் வான்வெளிப் படகில் ஏறி
தென்னவன் தமிழை இந்தத் தேசத்தின் உருண்டை எல்லாம்
பண்ணொடு பாடிப்பாடிப் பரப்பிடப் புறப்பட்டாற் போல்
கண்கொளாக் காட்சி ஊஞ்சல், கவிதையில் பறந்த காட்சி!

## கந்தப் போடியார் வீட்டில்

அருமையாய் பெற்றெடுத்த அப்பனும் அம்மை நீயும்
'கருகரு' வென்று நெஞ்சு காய்கிறோம். வடிவேல் சாமி
ஒருவனும் இல்லை. வேட்டை ஒன்றுதான் குறைச்சல்! காட்டில்
எருமைகள் வெட்டிக் கிட்டி எறிந்ததோ தொலைக நாய்கள்!

மடையனும் போகான். உன்றன் மகன் செல்வன் மதியைப் பார்பார்
வடிவேலைக் கண்டு நாலு வார்த்தைசொல் லாமலுக்குக்
குடியேன்நான் தண்ணீர், அந்தக் கூட்டத்தால் வந்ததெல்லாம்
கடவுளே என்றார் கந்தப்போடியார் கவலையோடு.

வருஷமும் அதுவுமாய் உம் வாயிலே நல்ல வார்த்தை
வருவதற்கென்ன? கொண்ட வழக்கத்தை விடவா கூடும்
முருகன்தான் துணை, வில்லங்கம் மூளாது! செல்லன் சாமி
வருகிறார் அங்கே என்று வாசலைப் பார்த்தாள் பொன்னு!

# வேட்டைக்குப் போனவர் திரும்பினர்

'மான்மூன்றும் கலையன்; பெட்டை மரையொன்றும் சுட்டோம் என்று
தான்சுட்டாற்போல, சாமி தலையினை நிமிர்ந்தான். 'என்று
ஏன்வாங்கிக் கட்டியுள்ளேன்? எங்கே உம் வடிவேல்? தேடி
நானிங்கே செத்தேன் என்று நடுங்கினார் கந்தப் போடி.

புருஷனைப்பார்த்துக் கண்ணைப்புரட்டினாள் பொன்னம்மா போய்
அரப்புவை மகனே என்று அன்பினால் ஆஞ்ஞாபித்தாள்
கிறுகினான் சாமி வாசல் கிணற்றடிப் பக்கமாக
வருஷமும் அதுவுமாய்நல் வாழ்த்துத்தான் என்றான் செல்லன்.

கண்விழித் திரவு முற்றும், காட்டிலே அலைந்து மேனி
புண்ணென்று சொல் பொய்யாய்ப் புலம்பினான் சாமி கேட்டு
தண்ணிக்கு வளை கின்றாயா? தரமாட்டேன்? வருஷம் ஓர்நாள்
என்னடா காட்டில் வேலை இரவெல்லாம்? என்றார் கந்தர்.

முழுகிவிட் டீர்கள்போல? முகத்திலே உஷாரைக் காணோம்
அழுபவன் போல சாமி அரட்டினான் போடியாரை
புழுகாதே போடா அந்தப் போத்தலை உடைத்துக்; கொஞ்சம்
முழுகுமுன் போடேன் என்று மொழிந்தனர் கந்தப்போடி.

பனைப்பழ முகிழைக் கையில் பற்றியும் திருகினாற்போல்
கணத்திலே போத்தல் மூடிக் கடதாசைக் கழற்றி நல்ல
கணக்காக ஊற்றி மூக்கில் காட்டினான் முகத்தைக் கோணி
அனுக்கினான்; கண்ணைமூடி அடித்தபின் ஹ ஹ் ஹா என்றான்.

வெற்றிலை போட்டுக் கொண்டு வெளிக்கிட்டான் சாமி. அங்கே
முற்றத்தில் நின்ற செல்லன் முழுத்தம் எப்படியோ என்றான்
பற்களை இழித்தசாமி 'பலாப்பழ வாசம்! வெள்ளை!
மற்றொரு முறை போடப் போய் வருகிறேன். என்று போனான்.

மாமியார் வீட்டில் அந்த மரைச்சந்தைக் கொடுப்பேன் என்று
சாமியன் நடந்தான் செல்லன் சருவத்தில் வெந்நீர் வார்த்தான்.
கோயிலில் கொட்டுமேளம் குரவையின் இனிய ஓசை
தோயவும் காதில், தானும் தோய்ந்துமே உள்ளே வந்தான்.

வீட்டுக்குள் ளிருந்து பொன்னு வெளியேறி மண்டபத்துள்
வேட்டியைக் கொடுத்தாள். வாங்கி வினயமாய்ச் சிரித்தசெல்லன்
சோட்டைப்பட்டது போல் நல்ல சோக்கான வேட்டி என்று
நீட்டினான் கரங்கள். சாமி கும்பிடக் கோயில் போனான்.

கோயிலுக்குள்ளே பெண்கள் கூட்டங்கள் பலவாய் நின்று
வாயிலோர் கையை வைத்து மற்றக்கை இடையிற்சேர்த்து
கூஎன்று குரவையிட்டார். குழல்பல சேர்ந்தும் ஆங்கு
பாய்கின்ற இனிய ஓசை பண்ணுமா; பகர்தல் எங்ஙன்?

பூசைகண் டார்கள் மக்கள் புற்றுக்குள் ஈசல் போன்று
வாசலில் வந்தார் வேர்வை வடிகின்ற மேனி யோடு
பேசினார் இரைந்து சந்தைப் பெருங்கூச்சல் தொடங்க யாரோ
பேசாதீர் என்றார். ஐயர் பிரசாதம் வாங்கிப் போனார்.

செல்லனும் கோயிலாலே திரும்பினான் கந்தப்போடி
செல்லமாய்த் தம்பி என்றார். சீக்கிரம் பொன்னு என்றார்
எல்லாம் ஆயத்தம் நீங்கள் எழும்புங்கள் என்றாள் பொன்னு
செல்லனும் போடியாரும் சேர்வைக்கால் வட்டில் கண்டார்

அழகுசம் பாவைக்குற்றி கமுகம் பூப்போலத் தீட்டி
இளகவைத் திடித்து தேங்காய் இணக்கமாய்க் கலந்து மூங்கில்
குழலிலே அவித்த வம்பிப் பூப்போல பிட்டு மேலே
நெழிகிறஆவி செல்லன் பசியினை நெருடி நிற்கும்.

## தேரும் திமிரும்

தேரைப்பார் தேரை! என்று தெருவினில் திரண்டார் ஊரார்
பாரதன் அழகையென்று பல்லினை இழிப்பார்! டேய் டேய்
ஆரது தேர்முன் கேட்டி அடிவேணு மாக்கும்! போ போ
தேர்வண்டி ஓட்டும் சாமி திமிருடன் எழுந்து சொன்னான்.

வன்னிய தெருவார் தேரை வந்துபார் காசு வேண்டாம்!
அன்னத்தின் மீதில் அம்மன் அமர்ந்திருப்பதனைச் செய்த
வண்ணத்தையெல்லாம் ஈங்கே வாய்விட்டுச் சொல்லப் போனால்
முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களும் முழுதாய் வேண்டும்.

மாசிலாமணி யோடாவி மன்னன்தான் மனுஷன் கையை
கூசும்மண் தின்பதற்கு குலவித்தை! அவனுக்கெல்லாம்
காசெல்லாம் செலவு எங்கள் கந்தப்பர் கணக்காம்! ஊரார்
பேசிக் கொண்டார்கள் தேரைப் பின்பற்றி வண்டி பத்து

ஏர்சுமந்தெடுத்த தோளில் இறுமாப்பைச் சுமந்து வந்தால்
போரையும் வெல்வோம் என்று புறப்பட்ட இளைஞர் கூட்டம்
ஆர்ஆர்தம் மச்சிமார்கள் அவரவர் வேலிக்குள்ளே,
பார்க்கின்றார் என்று பார்த்து, பார்தேரைப் பார்பார் என்பார்.

பார்வதிப் பெத்தா கூடப் பாதையில் ஒதுங்கி நின்று
கூர்மையாய்த் தேரைப் பார்த்துக் கும்பிட்டாள் இதனைக்கண்டு
பார்இந்தக் கிழவிக்குள்ள பக்தியை! என்று செல்லன்
சாரிலே இருந்த வேலன் சரவணை இடத்தே சொன்னான்

'அன்னமும் வேலிக்குள்ளே அதோ' என்றான் இளையான் உன்றன்
கன்னத்தில் தருவார் பெத்தா கவனமாய்ப் பேசு! வேலன்
சொன்னதைக் கேட்ட செல்லன் சொக்கிலோர் சுணையுள் நீந்தும்,
அன்னத்தைக் கண்டார், வண்டி அமர்ந்துள்ள தோழரெல்லாம்!

கோயிலின் வீதியெங்கும் குரவையும் வெடியும் கும்பல்
பாய்கிற வண்டி தேரும் பயத்தொடு பணிந்த தங்கு.
ஆயிரம் சிறுவர் வந்து அழகான தேர்தான் என்று
வாயூறி நின்றார். சாமி வன்மத் தோடவரைப் பார்த்தான்!

கோயிலைத் தாண்டித் தேரைக் கொண்டிப்பால் வந்தீரோ உம்
வாயிலே மண்தான் என்று, வம்மியின் கீழேநின்று
கூயென்று கொன்னை நல்லான் கொடுக்கினை இழுத்துக் கட்ட
சாயடா மாட்டை என்றான். சண்டியன் சாமித்தம்பி

தேர்வந்த வண்டி போகத் தெருவிலே இடமில்லாமல்
ஆராரோ குவிந்தார். வண்டி அசையாமல் நின்றதங்கே!
பாரிப்போ புதினம் என்று பல்லினால் வில்லுக் கத்திக்
கூரினை இடுக்கிக் கொண்டு குதிப்பதற் கெழுந்தான் சாமி!

உண்டோடா வீரம் உங்கள் உடையாரின் தெருவாருக்கும்?
வண்டியை விடடா என்று வன்னிய தெருவார் கத்த
பெண்டுகள் பிள்ளைகுட்டி பெரியவர் விலகீர் என்றே
வண்டியில் ஏறிவந்த வாலிபர் குதித்தார் கீழே!

உடையாரின் தெருவிலுள்ள உறுப்பான ஆண்கள் எல்லாம்
படையாகத் திரண்டு கொண்டு பாதையை மறித்து வண்டிக்
கடையாணி கழற்றும் கையைக் கால்களால் மிதித்த வாறே
விடுமண்ணே வழியை என்று விருட்டென எழுந்தான் செல்லன்

சச்சரவெதற்கு? நாம்யார்? சந்தோஷ தினத்தில் இந்தப்
பொச்சாப்பேன்; நண்பர்கள் நீர் போகலாம் என்ற வாறே
உச்சத்தில் கூவிக்கொண்டு உடையாரின் மைந்தன் வந்தான்.
கச்சடாப் பயல்கள் என்று கத்தினான் சாமித்தம்பி.

கணபதிப் பிள்ளை சொன்ன கட்டளை காதில் கேட்டுச்
சனம் ஒரு பக்கமாகச் சரிந்தது. சாமி வண்டி
கணகண சதங்கை நாதம் காளைகள் குதித்துப் பாயும்!
மனமடி வுற்ற பேர்கள் மறைந்தனர் மானம் போர்த்து

## கூத்துக்களரியில் இன்பம்

பிள்ளையார் கோயில் கிழக்கு வீதியிலே
பெருமணல் செறிந்திடு வெளியில்
சள்ளைகள் விரிந்து சதைமடிப்பேறிச்
சளிந்திடும் வயிற்றோடு கொடிய
வல்லசுரர்போல் வளர்ந்துள ஆலும்
வம்மியும் புளிகளும் அதன்கீழ்ப்
புல்தலை காட்டிச் சிரித்திடும் பரந்த
பூமியில் எழுந்ததோர் மேடை.

பன்னிரு கால்கள் நாட்டிய வட்டம்
பந்தலின் மீதுமேற் கட்டி;
பன்னிரண் டிதழ்செம் பருத்தியின் பூ, நிலம்
பார்த்தது போற்பல நிறத்தில்;
தென்னையின் குருத்தில் கிளிகளும் விளங்கும்
தொங்கிடும் குஞ்சமும் கட்டி,
மண்குவித் தமைந்த மேடையை அரங்கு
மண்டபம் ஆக்கினார்.... ஆங்கு.

பந்தலில் கால்களுக் கிடையிடை எண்ணெய்
பந்தக்கால் வரிசையாய் நட்டார்!
சந்தனம் நீறு குங்குமச் செப்பும்
சால்வைகள் சல்லரி மேளம்
வந்தன பிறவூர்ச் சனங்களும் மொய்யென
வந்தனர் ஊரெல்லாம் மக்கள்!
சந்தையே போலக் கூத்தினைப் பற்றிச்
சர்ச்சைகள் மலிந்தன பாரீர்!

ஊரெலா மிருந்து உறவெலாம் வந்த
உவகையால் ஊரெலாம் கள்ளே!
ஆரெவர் என்ற பேதமில்லாமல்
அன்பிலே நடந்தது விருந்தே!
'ஓரிரு கூத்தா ஒன்பது கூத்தும்
ஆடினேன் அது ஒரு காலம்!'
காரைதீவிருந்து வந்த ஓர் கிழவர்
கதையினை அவிழ்ப்பதும் கேளீர்?

மண்முனை மட்டக் களப்பொடு மகிழுர்
மாவடிப் பள்ளி மண்டூரும்
கிண்ணையூர், துறையூர், நிந்தவூர் ஒல்லிக்
கேணியூர் சேனையூர் யாவும்
சொன்னது போலே சொரிந்தன; வந்து
சூரியன் மறைவதற்குள்ளே!
அண்ணாவி மார்கள் அவர்ஒரு குழுவாய்
அமர்கிறார் ஆல்களின் கீழே!

முறுக்கிய மீசை முகத்திலே சிரிப்பு
மோகன மாகிய நடைசேர்
விறுக்கன் அண்ணாவி வெள்ளையன் நெற்றியில்
விளங்கிய சந்தனப் பொட்டை
நிறுத்தி வைத்தாற் போற் சித்திரை மாத
நிறைவுபோல், நிலவுமென் மடந்தை
ஒருத்தியும் கூத்தே கருத்துடையவள் போல்
ஊர்வருமுன் கிழக் கிருந்தாள்!

வெள்ளையன் தோழன் வேலன் அண்ணாவி
வேட்டியை இடுப்பிலே செருகி
அள்ளிய சால்வை உதறியும் வேட்டி
அவிழ்ந்திடா வாறிடுப் பிறுக்கி,
பிள்ளையார் இருந்த திசையினை வணங்கி
பேர்பேறு மத்தளம் எடுத்தான்
'சல் சல சல்சல் சல்' லெனக் சதங்கைச்
சமுத்திரம் போல் ஒலி எழுமே?

உடுப்புக்கள் கட்டி மாற்றுகள் புனைந்து
ஒவ்வொரு கொலுவிலுள் ளாரும்
எடுத்தடி வைத்த சதங்கையின் ஓசை
எங்கணும் நிறைந்திடல் கேட்டு
அடிக்குரல் எடுத்து நாக்கினை அசைத்து
அரிவையர் குரவையிட்டார்கள்
வெடித்தன வெடிகள். கோயிலின் முன்னே
விருத்தமொன் றெழுந்தது கேளீர்.

வெள்ளையன் குரலில் சதங்கையும் குரவையும்
வீழ்ந்தன மக்களின் குரலும்
பிள்ளையார் மகிழ ஆடினர். தேங்காய்
பிளந்தனர் ஆடிய அவர்கள்
மெல்லென நடந்தார் களரியில் மேளம்
மிதந்தது சல்லரியோடு
எள்விழுந் தால்விழ இடமில்லை! நிலத்தில்
எங்கணும் மக்களின் வெள்ளம்!

கட்டியக் காரன் கணபதிப்பிள்ளை
களரியில் தோன்றினான்; வெள்ளை
கட்டியால் மறைத்தார், வெடியோடு குரவை
விண்ணெலாம் நடுங்கின! பாய்ந்து!
எட்டடித் தாளக் கட்டிலே ஆட்டம்
பட்டது களரியில் பாடாய்!
தட்டினார் கிழங்கள் தொடைகளில் தாளம்
ததிங்கிணத் தாதெய்யத் தோம் தோம்!

அன்னமும் கூத்துப் பார்ப்பதற் காசை
கொண்டனள் ஆயினும் அப்பன்
சொன்னசொல் கடவாச் சுதந்திரம் உடையாள்
சோகமே உருவமாய் நின்றாள்
கண்ணிலே கனிந்த கனிகளைக் கையால்
கொய்திடும் கன்னியின் நெஞ்சில்
என்னவோ புதிய எண்ணமொன் றெழலும்
எண்ணினாள் செல்லமச்சானை

கணபதிப் பிள்ளை களரியில் வரவு
கட்டியம் சொல்லவும் தொடங்க
உனதென தென்று ஓடினார் உரிமை
உள்ளவர் அத்தனை பேரும்!
சனசமுத் திரத்தின் சந்தடி - குரவை
சடசட வெடிகளின் ஓசை
கணபதிப் பிள்ளை இடையிலே சால்வை
கட்டினார் மோதிரம் அணிந்தார்!

அடுத்தவூர் இருந்து வந்த
அண்ணாவி மார்கள் கூட
எடுத்தவாய் மூடா வண்ணம்
இருந்தனர்! இளைஞரெல்லாம்
குடித்தகள் வாயில் நாற
கூத்தினை நயந்தார் வீட்டில்
படுத்தவர் பாட்டுக் கேற்ற பாவனை
பண்ணிக் கொண்டார்!

'அன்னமே......! அணங்கே...........
தெய்வ அரம்பையே!..... அல்லி மானே.....'
என்ன ஓர் பாடல் கூத்தில்
இணை கையில் வடிவேல் - சாமி
என்னப்பா செல்லா...........
பாட்டு எப்படி இருக்குதென்று
கண்களைப் பணிந்து மேலே
காட்டி ஓர் மோடி செய்தார்!

அன்னமும் விழித்திருந்து
பாடலைக் கேட்டாள் செல்லன்
முன்னொரு நாளில்
தன்னை முறைகேடு பண்ணவந்த
எண்ணமும்; வயலும், யாவும் எழுந்தன மனதில்!
நாணி இன்னமும் பயிராய்
நெஞ்சுள் இருக்கிறதென்னே என்றாள்!

செல்லனை எண்ணிப் பார்க்கச்
சிரிப்பொன்று
சிறையை விட்டு
கொல்லென வெளியே பாய
கொடுப்புக்குள் அடக்கிக் கொண்டாள்!
வெல்லம் போல் இனித்த
அந்த விருத்தத்தைக் கேட்ட செல்லன்
உள்ளத்தை-
ஒருவாறு அன்னம் ஊகித்தாள்
உறங்கிப்போனாள்!

களரியின் அருகில்
செல்லன் கலியாணப் பேச்சு வார்த்தை!
கிழவனைப் பாரேன்!
என்று கிள்ளினான் வடிவேல்!
சாமி களவாக எட்டிப்பார்த்தான்!
கந்தப்பர் ..... அழகிப்போடி
தலையினை அசைத்து
தாளம் தகர்ப்பதும் கண்டான் செல்வன்.

❀ ❀ ❀ ❀



## நீலாவணன்

1931ற் பிறந்த நீலாவணன் 1952ல் 'பிராயச்சித்தம்' என்ற சிறுகதை மூலம் எழுத்துலகிற் பிரவேசித்தார். அடுத்த ஆண்டே 'ஓடிவருவதென்னேரமோ' என்ற கவிதை பிரசுரமாயிற்று. அன்று தொடக்கம் 11. 01. 75ல் இயற்கை எய்தும் வரை கவிஞனாகவே வாழ்ந்தார். பல்வேறு இலக்கியத்துறைகளிற் கை வைத்திருப்பினும், கவிஞனாக அவரது பங்களிப்பு ஈழத்து இலக்கிய உலகில் மிக்க மகத்தானது.

கல்முனை எழுத்தாளர் சங்கத்தைத் தாபித்து அதன் தலைவராகப் பணியாற்றிய நீலாவணன், ஆங்கு தன்னைச் சுற்றி ஒரு கவிதா மண்டலத்தையே சிருட்டித்தார். ஈழத்தின் எந்தப் பிராந்தியத்திலும் அத்தனை கவிஞர்களைக் கல்முனையிற் போலக் காணமுடியாது. அதன் காரணகர்த்தா நீலாவணனே.

பிறந்த ஊரிற்கொண்ட பாசத்தால், பெரிய நீலாவணையிற் பிறந்தவரான கேசகப்பிள்ளை சின்னத்துரை, 'நீலாவணன்' ஆனார். ஈழத்து கவிதையுலகில் அவருக்கு நிரந்தரமான இடம் உண்டு.

\- ஈழநாகன்

ISBN: 978-955-97461-2-6

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195